293

# ஜகன்மோகினி



ஸ்ரீமதி காசினி

14 AUG 1943 MADRAS

## இவ்விதழில்

மதுர கீதம் (தொடர்ச்சி)
வை. மு. கோ.

ஜகன்மோகன கோபாலன்
வேறு சில பால லீலைகள்
பி. ஸ்ரீ.

மகாத்மா தரிசனம்
எஸ். அம்புஜம்மாள்

தியாகச் சுடர்
'குகப்ரியை'

ஸ்ரீமதி காசினி
ஸ்ரீ ஜானம்மாள்

திருக்குறள் ஸாரம்
வரகவி பாரதியார்

பொன்னடிகள்
'கௌண்டின்ய'

சந்தோஷ வாழ்க்கைக்கு
தேவை யாது?
"ஸமுத்ரா"

293
ஜெகன்மோ
திருவல்லி

Vol. 20. No. 4.

APRIL 1943

சித்ரபானு

பங்குனிமீ

*Jaganmohini*
*The only Ladies' Magazine in Tamil*
*Commands the LARGEST Circulation*
*among monthly journals*

OFFICE, SINGAPERUMALKOIL. S. I. Ry.

JC
ண211,N122J M
M43.20.4
183078

20 CENTS

ஆசிரியை-
வை. மு. கோதைநாயகி அம்மாள்




ஸ்ரீராமஜயம்.

சித்ரபானு ஹூ பங்குனிமீ

ஏப்ரல் 1943

மலர் 20 இதழ் 4

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

April. 1943. Vol. 20. No. 4.

## மூன்றணுவுக்கு 36 பக்கங்கள்.

சர்க்காரின் புதிய உத்திரவுப்படி மூன்றணுவுக்கு விற்கப்படும் நமது மோகினியில் மொத்தம் 36 பக்கங்கள்தான் வெளியாகலாம். அதன்படியே இவ்விதழில் வெளியிட்டுள்வோம். ராப்பர் உள்பட 36 பக்கங்களில் இப்போது வெளியாகும் விஷயங்களை சாதாரண நாட்களில் விசாலமாக அச்சிட்டதுபோல வெளியிட்டால் சுமார் 50 பக்கங்களுக்கு மேலாகவே வருமென்பதை கவனிக்கவும்.

மூன்றணுவுக்கு உங்களுக்கு எத்தகைய பல தினுசுப்பட்ட விருந்து அளிக்கிறுள் மோகினி! சௌகரியப்படும்போது மோகினி இன்னும் அதிக அம்சங்களை வெளியிட்டு நான்கணுவிற்கு கிடைக்கும்படிச் செய்கிறோம்.


### அவசரப்படாதீர்கள்.

சில சந்தாநேயர்கள் அவசரப்பட்டு 3 அல்லது 4 தேதிக்கே சஞ்சிகை வந்து சேரவில்லை யென்று கடிதம் எழுதிவிடுகிறார்கள். எவ்வளவு தாமதித்துச் சென்றாலும் எந்த ஊருக்கும் 10உக்குள் கிடைத்துவிடும். அப்படி 10உவரை கிடைக்காவிடில் 20உக்குள் எழுதவும். 20உக்குப்பின் எழுதுபவர்கள் 3 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

### உடனே அனுப்பவும்

சென்ற வருட ஆரம்பத்தில் சந்தா செலுத்துகையில் சிலர் இவ் வருஷத்தில் சில இதழ்களுக்கும் சேர்த்து அனுப்பியுள்ளார்கள். அத்தகைய நண்பர்கள் இவ்வாண்டு முடிய டிஸம்பர்வரை சந்தா பாக்கித் தொகையை உடனே அனுப்பவும். (மாதத்திற்கு மூன்றணுவீதம்.)

மானேஜர்.




## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 11. வேறு சில பால லீலைகள்

சில சமயங்களில் கண்ணன் யசோதையின் முதுகுப்புறமாக ஓடிவந்து அணைத்துக்கொள்வான். அப்போது அந்தத் தாயின் இன்பத்தை என்னென்பது? அவளுடைய பெருமையைத்தான் என்னவென்பது? "என் பிள்ளை என்னை முதுகில் கட்டிக்கொண்டான்; என் கண்ணன் ஓடிவந்து கட்டிக்கொண்டான்; எம்பிரான் அணைத்துக்கொண்டான்; என்னுடைய ஸ்வாமி வந்து என்னை அணைத்துக்கொண்டான்!" என்றெல்லாம் பூரித்துப்போவாள்.

ஒரு சமயம் அவள் பராக்காயிருக்கும்போது அவளுக்குத் தெரியாமலே பளிச்சென்று வந்து முதுகிலே கட்டிக்கொள்வான். ஒரு சமயம் இவன் வருவதைப்பாராததுபோலவே கடைக்கண்ணுல் பார்த்துவிடுவாள்,—அரைச் சதங்கையோடும், கழுத்துச் சங்கிலியோடும், கையில் கங்கணத்தோடும், மற்ற ஆபரணங்களோடும் அவன் நடந்து வரும் அந்த அழகை. அந்த அழகே அவளை இன்பத்தில் மூழ்கச் செய்துவிடும்.

ஒரு சமயம் அவன் பால் வெண்ணைப் திருடியுண்ட அந்த லீலை ஞாபகத்திற்கு வரும். அவனுக்கு எட்டாதபடி உறியிலே சேமித்து வைத்திருந்தார்களாம் மிடா மிடாவாகப் பாலும் வெண்ணெயும். கண்ணன் ஒரு உரலொன்றை உருட்டிக் கொண்டுவந்தான்; கவிழ்த்துப்போட்டான்; அதன்மேல் ஏறிக்கொண்டான். வயிருர விழுங்கிவிட்டான் வெண்ணெயும் பாலும். அப்படிப்பட்ட கள்ளக் கிருஷ்ணன் அந்த வயிற்றோடு யசோதையை முதுகில் கட்டிக்கொள்ளுகிறனும்:

> பொத்த உரலைக் கவிழ்த்(து) அதன் மேல்ஏறி,
> தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
> மெத்தத் திருவயி(று) ஆர விழுங்கிய
> அத்தன்வந்(து) என்னைப் புறம்புல்குவான்; ஆழியான் என்னைப்புறம்புல்குவான்

[பொத்த உரல்-பொத்தலோடு கூடிய உரல்; அடியிலே ஓட்டைபோய்விட்ட உரல். தடா-மிடா. ஆர-நிரம்ப. அத்தன்-ஸ்வாமி, தலைவன். புறம்-முதுகு. புல்குவான்-கட்டிக்கொள்வான். ஆழியான்-விஷ்ணு; (இங்கே) தெய்வம் போன்ற குழந்தைக் கண்ணன்.]

என்று நினைக்க நினைக்க யசோதையுள்ளம் வெண்ணெய் உருகுவதுபோல் உருகுகிறது.

183028

கண்ணன் உரலை உருட்டிக்கொண்டு வந்ததுகூடத் தாயாருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. "பொத்தலான உரலாகத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வந்தானல்லவா? என்ன முன் யோசனை" என்று மகிழ்ந்து போகிருள். நல்ல உரலானல் யாரேனும் உபயோகப்படுத்த வேணுமென்று தேடிப் பார்த்துப் பிள்ளையாண்டானையும் கையும் களவுமாய்ப் பிடித்துக் கொள்வாரல்லவா? 'தித்தித்த பாலும்' என்று சொல்லும்போதே, ருசிபாராமல் விழுங்கிவிடவில்லை;

ஆத்திரமாக விழுங்கிவிடவில்லை; ருசிபார்த்து, நன்றாக ருசிபார்த்துச் சப்புக் கொட்டிச் சாப்பிட்டான்—என்பது குறிப்பு. அந்தக்களவை அவ்வளவு சீக்கிரமாய்க் கண்டு பிடிக்கமுடியாதென்று அவனுக்குத் தைரியம். எனவே, மெத்த வயிறார விழுங்கினான்—என்று குறிப்பிடுகிறார்.

ஆம்; பெரியாழ்வார்தான் இப்படியெல்லாம் சொல்லுகிறார். ஆம், ஆம்; பெரியாழ்வாராகிய யசோதைதான்: யசோதையாகிய பெரியாழ்வார்தான்! அவர் தம்மை அவளாகப் பாவித்துக் கண்ணன் தம் முதுகிலும் வந்து கட்டிக்கொள்வதாகவே எண்ணுகிறார்—என்றால் போதாது; அனுபவிக்கிறார் என்றே சொல்ல வேண்டும். "கண்ணன் அக்காலத்தில் யசோதையை முதுகில் கட்டிக்கொண்டது போல் என்னையும் கட்டிக்கொண்டான்; கட்டிக்கொள்ளுகிறான்; இன்னும் இன்னும் அப்படியே அணைத்துக்கொள்வானாக" என்றெல்லாம் உருகுகிறார். யசோதைக்குக் குழந்தையே தெய்வம்; ஆழ்வாருக்கோ தெய்வமே அந்தக் குழந்தை. எனவே, பால லீலைகளோடு துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன லீலைகளும் ஞாபகத்திற்கு வருகின்றன. "துரியோதனன் குடிகெடத் தோன்றிய குழந்தாய்! அணைத்துக்கொள்; அர்ச்சுனனுக்கு அருள்செய்த சாரதீ! கட்டிக்கொள்" என்கிறார். "மகாபலியிடம் யாசித்த வாமனன் என்னைத் தழுவிக்கொண்டான்!" என்கிறார். "சத்தியபாமையின் முற்றத்திலே கற்பகச் சோலையைத் தழைக்கச் செய்தவன் என்னை அணைத்துக் கொள்வானாக" என்கிறார்.

இதுமட்டுமா? யசோதை, குழந்தைக் கண்ணனுக்குப் பால் ஊட்டுவாளல்லவா? 'அம்மம்' உண்ண எழுப்புவாளல்லவா? தம்மை யசோதைத் தாயாகவே பாவித்துக்கொண்ட பெரியாழ்வார் அப்படிப்பட்ட அனுபவங்களையும் அடைந்து ஆனந்திக்க விரும்புகிறார்!

கண்ணன் பகல் முழுதும் ஓடி ஆடி விளையாடிக் களைத்துப்போய்ப் பொழுது போனது தெரியாமல், முலை உண்பதையும் மறந்து உறங்கிப்போகிறானாம். யசோதை,

**அம்மம் உண்ணத் துயில் எழாயே**

[துயில் எழாய்-தூக்கம் தெளிந்து எழுந்திருக்கவேணும்.]
என்கிறாள்.

**ஆயர்பாடிக்(கு) அணிவிளக்கே!**

என்று கொஞ்சி அழைத்துப் பால் ஊட்டுகிறாள். "செந்தாமரைப் பூவில் முத்துகள் சிந்தினாற்போல் முகம் வியர்க்க, உடம்பெல்லாம் புழுதியாக அந்தப் புழுதியை அப்படி அளையவேண்டாம்; பால் சாப்பிட வா" என்று கூப்பிடுகிறாள்.

**ஆடி ஆடி அசைந்(து) அசைந்திட்(டு)**
**அதனுக்(கு) ஏற்ற கூத்தை ஆடி,**
**ஓடிஓடிப் போய்விடாதே.**

என்று கெஞ்சியும் கொஞ்சியும் வேண்டுகிறாள்.

இப்படியெல்லாம் பெரியாழ்வாரும் அனுபவிக்கிறார். "ஆயர்பாடிக்கு அணிவிளக்கே" அகிலலோகங்களுக்கும் அணிவிளக்கு-என்பதும் இவருக்குத் தெரியும். கண்ணனுடைய பால லீலைகளை அனுபவிக்கும் பெரியாழ்வார் "உலகமெல்லாம் அவனுடைய லீலைதான்" என்பதைத் தாமும் உணர்ந்து நமக்கும் குறிப்பாக உபதேசிக்கிறார்.

---


## ஞானதீபம், வாத்ஸல்யம்

ரூ. 1-12. ரூ. 1-12.

இரண்டும் ரூ. 3-8-0. தபாற்செலவு இனாம்

1942-வருடத்தில் வெளியான ஷை இரு நவீனங்களின் புதிய பதிப்பு இப்போது வெளியாகியுள்ளது. ரூ. 3-8-0 அனுப்புவோருக்குத் தபாற்செலவு இனாமாக, ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே உள்ளதால் உடனே முந்துங்கள்.

**ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்**

# மகாத்மா தரிசனம்

## (எல்லாருக்கும் ஓர் உயிர்)

"தேசத்திலே பிரசவ ஆஸ்பத்திரிகளில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான தாய்மார்கள் இறக்கின்றனர். அதைப்பற்றிக் கேட்பாரைக் காணோம். இந்தியாவின் எங்கோ ஒரு மூலையிலே ஜெயிலில் ஒரு கிழவன் பட்டினிகிடந்து சாகப் பார்க்கிறான் என்றால், உலகமெல்லாம் இவ்வளவு ஆர்ப்பாட்டமா? அவனை நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி என்ன என்ன கிளர்ச்சிகள்! அடடா, எத்தனை பேர் சிபார்சுகள்! இது என்ன 'டாம் பூல்' தனம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்று ஒரு ஆங்கிலேயர் பத்திரிகாசிரியர் ஒருவரிடம் சொன்னாராம்.

**உயிரும் உயிர் நிலையும்**

ஏழை-இந்தியாவின் 7,00,000 கிராமங்களில் வசிப்பவர்களுக்கெல்லாம் ஒரு யிரல்லவா காந்திஜி? முக்கியமாய் வாயற்ற, எண்ணிறந்த பொதுஜனங்களின் ஏகப் பிரதிநிதியல்லவா?"—அந்த ஆங்கிலேயரால் எப்படி உணரமுடியும் இந்த இரகசியத்தை? போர் வெறி கொண்ட உலகத்திற்கு முன்னே அஹிம்ஸை என்ற ஒரு தனிக்கொடி தாங்கித் தன்னந்தனியே ஒரு பித்தனைப் போலச் செல்லத் துணிந்த இந்தப் பாரதத் தாயின் அரும் பெரும் புதல்வருடைய பெருமையை உணர்வது அந்தச் **சர்ச்சில்** மகானாலேயே முடியவில்லை என்றால், மிகவும் சாமானியரான ஒரு துரையா தெரிந்துகொள்ளப் போகிறார்? காந்திஜியின் அஹிம்ஸா தர்மமே இந்தியாவின் விசேஷதர்மம்—இந்தியாவின் உயிர்நிலை—என்பதுதான் அவர்களுக்கு விளங்குமா?

இத்தகைய தனிப்பெருங் கொள்கையை—இந்தியாவின் உயிர்நிலையை—உணர்ந்து பிரசாரம் செய்துவரும் பெரியார்—ஏழைகளுக்கும் பிறருக்கும் ஒருயிரான மகா புருஷர்—21 நாள் பட்டினிகிடக்கத் தொடங்கிவிட்டார் என்ற செய்தியைப் பேப்பரில் ஜனங்கள் படித்ததுதான் தாமதம்; இமயமலை முதல் கன்யா குமரிவரை என்ன பாடுபட்டது! ஒவ்வொருவர் வீட்டிலும் காலை மாலை, துளஸிராமாயண படனமென்ன? கீதாபாராயண மென்ன! நியம நிஷ்டைகள் என்ன? அம்மம்ம! கோவில்தோறும் எத்தனை அர்ச்சனை அபிஷேகங்கள்! வீடு தோறும் மணிக்கணக்கில் கைராட்டைச் சுற்றுவதென்ன! போஸ்டாபீஸ்களில் தந்திகளோ மலைமலையாகக் குவிந்துவிட்டன. வைசிராய் மாளிகையிலோ, வந்த தந்திகளுக்காகப் பிரத்தியேக அறையொன்று காலிசெய்யவும் நேர்ந்தது.

ஏகாதசியன்றுகூட மூன்றுவேளை தவறாமல் சம்பிரமமாய்ச் சாப்பிடுகிற சீமான், சீமாட்டிகள் உள்ளிட்ட பலரும் இரண்டு, மூன்று நாள் அனுதாபப் பட்டினியும் கிடந்தனரென்றால், ஆச்சரியமாக இல்லையா?

இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், 'சாமியாவது, பூதமாவது யார் கண்டது? போ, பாட்டி!" என்று நிரீச்வரவாதம் செய்யும் பேரன்மார்கள் கூட, பள்ளிக்கூட வாசல்களிலும், காலேஜுகளிலும் கும்பல் கும்பலாய்க் கூடி மௌனப் பிரார்த்தனை பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்!

இப்படி நாடெங்கும் அமர்க்களப்பட, "காந்திஜியின் தேக நிலை இன்று மிகவும் மோசமாகிவிட்டது!" என்ற பயங்கரச் செய்தியைக் கேள்விப்பட்டதும், வீட்டில் சௌக்கியமாய் உண்டும், உறங்கியும் அமர்ந்திருக்கக்கூடுமா?

**பூனா யாத்திரை**

தந்திகள் அடித்தோம் பம்பாய் கவர்ன்மெண்டுக்கு அனுமதி வேண்டி. காந்திஜியை உடனே தரிசித்தால்தான் இருப்புக்கொள்ளும் என்று தோன்றியது எங்களுக்கு. "நீங்கள்போய் என்ன லாபம்? அவருடன் பேசி அவரைக் களைப்புறச் செய்யலாமா இந்தச் சமயம்?" என்று சிலர் கேட்க, ஹாம்லெட் கதாநாயகன் போல், "போவதா? வேண்டாமா?" என்ற யோசனையில் ஆழ்ந்

தோம் இரண்டு மூன்று தினங்கள். சரியான தூக்கமுண்டா? சாப்பாடு உண்டா! எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது எங்களுக்கு அந்தச் சமயம்.

கடைசியில் ஒருநாள் என்ன ஆனாலும் சரி; 'மூன்று நிமிஷம் மௌன தரிசனம்' கிடைத்தாலும் போதும்—என்று பூனாவுக்குப் புறப்பட்டுவிட்டோம், மிஸஸ் சுப்பராயனும், ஸ்ரீ ஜானம்மாளும், நானுமாக.

இந்நாளில் ரெயில் சங்கதிதான் தெரியுமே; மைல் நீளம் வண்டித்தொடர்; எல்லாம் ஒரே ஸோல்ஜர்மயம். இட்டலி காப்பிக்குக்கூடப் பஞ்சம். தாகத் துக்கோ ஒரு ஸோடாப்புட்டிகூடக் கிடைக்கவில்லை. இளநீர் ஒன்றுக்கு அணா இரண்டு. அதுவும் அவர்களுக்குக் கண்டு மிஞ்சினல்தான். எப்படியோ போய்ச் சேர்ந்தால் போதுமென்று ஆகிவிட்டது.

பூனாவில் மகாத்மா காந்தியின் அருமைப் புதல்வர் தேவதாஸ் காந்தி எங்களை அன்புடன் வரவேற்ருர். காந்திஜியின் தேகநிலை சற்று திருப்திகரமாயிருப்ப தாகத் தெரிவித்தார். எங்கள் வழிப் பிரயாணக் களைப்பெல்லாம் தீர்ந்து விட்டது. சென்னையில் நாங்கள் பட்ட கஷ்டமெல்லாம் மறந்துபோயிற்று. உள்ளூர மனஸிலே கடவுளுக்கு வந்தனம் செலுத்தினேம். அன்று மாலையே ஆகாகான் மாளிகைக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டும் கிடைக்கவே, நிம்மதியாய்ப் போஜனம் செய்து இளைப்பாறினேம்.

## தரிசனம்

மாலை 4-30-மணிக்கு அங்கே போனேம். **கேட்டு**முன் பலத்த காவல். எங்களைப்போல், சுமார், 70, 80 பேர்—ஆண், பெண், பாலர் உள்ளிட்டவர்—வாசலில் காத்துக்கொண்டிருந்தனர் மணிக்கணக்கிலே.

சரியாக 5-30-மணிக்கு உள்ளே போக அனுமதிக்கப்பட்டோம். உள்ளேயும் முள்ளுக்கம்பிகளாலான **கேட்**, காவல் எல்லாம். சுற்றிலும் பிரமாண்டமான தோட்டம். நடுவே ஒரு பழயகாலத்து மாளிகை. அந்த மாளிகையின் ஒரு அறையிலே கட்டிலில் உடல்பூராவும் வெள்ளைக் கதர் போர்த்துப் படுத்துக்கொண்டிருந் தார் காந்திஜி. முன்போல அதே பிரகாசமான முகமண்டலமும் கண்களும்தான். ஆனல் படுக்கையில் உடல் இருந்த இடமே தெரியவில்லை. அவ்வளவு மெலிவு. அவரைப் பார்த்ததும் அழவும் முடியாத துக்கம் பொங்கி எங்கள் தொண்டையை அடைத்துக்கொண்டு பேசவொட்டாமல் செய்துவிட்டது.

"நான் இறந்தேபோய்விடுவேன்!—என்று நீங்கள் பயந்தீர்களல்லவா? இதோ பிழைத்துவிட்டேன், பார்த்தீர்களா?" என்று குறும்பாய்க் கேட்பது போலிருந்தது அவர் எங்களைப் பார்த்துச் செய்த புன்முறுவல்.

சென்னை ஸ்திரீகள் எல்லோரும் அவருக்காகப் பிரார்த்தனை செய்வதாக மட்டும் சொல்ல முடிந்தது. அதற்கு அவர் ரொம்ப நிதானமாக அத்தகைய பிரார்த்தனைகள்தான் தமக்கு உயிரளித்து வருவதாய்ச் சொன்னர். பிறகு எங்களில் ஒவ்வொருவருடைய குடும்பத்தின் க்ஷேமலாபங்களையும் மிகப் பரிவுடன் வினவினர். அவரைப்பற்றி எங்களால் என்ன கேட்க முடிந்தது? ஒன்றுமே இல்லை.

## அன்னையின் அன்பு

இதற்குள் நிமிஷம் மூன்ருகிவிட்டது என்று ஜெயிலர் சொல்ல, அன்னை கஸ்தூரிபாயை வணங்கிச் சற்றுப் பேசியிருந்து வெளியே வந்தோம்.

அவரது அன்புதான் என்ன! எங்கள் சுகதுக்கங்களை எவ்வளவு ஆர்வத் துடன் கேட்டுத்தெரிந்துகொண்டார், அவருக்குற்ற அபாரமான மனக்கிலேசத் தின் மத்தியிலும் கூட! பொறுமையில் பூமிதேவி யென்று அவரைத்தான் சொல்லவேண்டும். உபசாரமாக அல்ல; உண்மையிலேயே. அந்த ஜெயில்-வாசத் தின் கஷ்டங்களையும், தம் அருமைக் கணவரின் உயிருக்கே வந்த அந்த ஆபத் தையும் எவ்வளவு சாந்தமாக, வாய்பேசாது, சகித்து வந்திருக்கிருர்!

சீதை, சாவித்திரிக்கு ஒப்பான இந்தப் பதிவிரதாசிரோமணியின் அற்புதமான அன்பே, மகாத்மாவின் போன உயிரை—நமக்கெல்லாம் பொதுவான ஓருயிரை—இந்தச் சோதனைக்காலத்தில் மீட்டுக்கொடுத்தது என்று சொல்லவேண்டும்!

சரித்திர சிறுகதை

# தியாகச் சுடர்

"குகப்ரியை"

காலை இளவெயிலின் கிரணங்கள் டில்லி நகரைப் பொன்முலாம் பூசிக் கொண்டிருந்தன. "யாரோ ஒரு இராஜபுத்ர வீரன் வெகு அவசரமாய் வந்து, குதிரையின்மேலிருந்து குதித்து கோட்டைக்குள் நுழைகிறானே! இவன் யார்?" என்று ஆச்சர்யப்படுகிறார்கள் காவலாளிகள். ஆனால் தடுக்கவோ நிறுத்தவோ அவர்களுக்கு உரிமையில்லை. கருணைமிகுந்த சக்ரவர்த்தி ஹுமாயூன், தன் நாட்டிலே எல்லோருக்கும் சம உரிமை அளித்திருந்தான். ஹிந்துவென்றும் முஸ்லிம் என்றும்எவனுமில்லை சாதியில். மனிதர்மனிதராய் வாழ்ந்தார்கள் அவன் ஆட்சியில்.

அன்று வழக்கத்திற்கு முன்னதாகவே தர்பார் கூடிவிட்டது. ஏன்? மேவாரிலிருந்து வந்த வீரனே அதற்குக் காரணம். அவன் எதன்பொருட்டு வந்தானென்ற விஷயம் தெரியாமலே அவனை வீரருக்கு உரிய மரியாதையோடு வரவேற்க விரும்பினான் ஹுமாயூன். மந்திரிகளும் பிரதானிகளும் மௌல்விகளும் வந்து அமர்ந்தார்கள், தர்பார்கூடியாயிற்றென்பது மும்முறை அறிவிக்கப்பட்டது. இதே சமயத்தில் ரஜபுத்ர வீரனுடன் உள்ளே நுழைந்தான் ஸேனாதிபதி தாதர்கான்.

சக்ரவர்த்தி வந்தவனை வரவேற்று ஆசனமளித்தான். ஆனால் அவன் உட்காரவில்லை. ஒரு ஓலைச்சுருளையும் அழகிய பட்டுப்பை ஒன்றையும் சக்ரவர்த்தியின் முன்னிலையில் வைத்தான். ஓலைச்சுருளை எடுத்துப் படிக்கலானான் ஹுமாயூன் சபையோர்கள் வைத்த கண் வாங்காமல் அவன் முகத்தையே பார்த்திருந்தார்கள். ஓலையைப் பிரித்ததும் அவன் முகம் ஆச்சர்யத்தினால் மலர்ந்தது. சேனாதிபதி தாதர்கானது உதடுகள் துடித்தன. மேவாரிலிருந்து முக மலர்ச்சியோடு வரவேற்கக்கூடிய செய்தி என்ன? என்று கேட்க விரும்புபவன்போல் எழுந்து நின்றான். இதற்குள் ஓலைச்சுருளை வைத்துவிட்டு, அந்தப் பட்டுப்பையைத் திறந்து அதிலிருந்து ஒரு அழகிய வளையலை எடுத்தான். சபையிலிருந்தவர்களுடைய கூர்மையான பார்வை அந்த அழகிய கங்கணத்தின்மேல் விழுந்தது. வைரமும், கெம்பும், முத்தும் கலந்து இழைத்த அந்த வளையல், மேவார் அரசி கர்மவதி தேவியின் கைகளை அழகுசெய்தது இன்றுசக்ரவர்த்தி ஹுமாயூனுடைய கைக்குவந்துவிட்டது.

பாதுஷா மிகவும் மெல்லிய குரலில் "சபையோர்களே! மகாராணி கர்மவதி தேவியின் வளையல் இது. குஜராத் பாதுஷா பகதூர்ஷா இன்று சித்தூரின் மேல் படையெடுத்திருக்கிறான். காரணம் என்ன? சாந்த்கான் என்பவன் பகதூர் ஷாவின் தம்பி. அவன் உடன்பிறந்தவனுக்குப் பயந்து மேவாரில் சரண் புகுந்தான். 'அவனை விடுகிறாயா? போருக்கு வருகிறாயா?' என்று அறை கூவினன். ரஜபுத்ரர் சரணடைந்தவர்களை காட்டிக் கொடுப்பார்களா? முடியாது என்றான் விக்ரமன். அதன் பயனாக நேர்ந்ததுதான் இந்த யுத்தம். ராணாவிக்ரமாதித்தன் வெறும் கோழை. எங்கேயோ அரவல்லிமலைத்தொடரில் ஒளிந்துவிட்டானாம். மூத்தராணி ஜவஹர்பாய் தானே வாளேந்திப் போர்முனைக்குப் போய்விட்டாளாம். என்ன ஆச்சர்யம்! ரஜபுத்ரப் பெண்களைப் போல் இந்த வீரம் மொகல் பெண்களுக்கு இருந்தால் இந்த பாரத பூமி இப்படியா இருக்கும்? போர்த்துகீஸ் கவர்னர் சென்றமுறை வந்தபொழுது சொன்னான். "மேவார் நாட்டில் கல்லும் புல்லும் சமர் செய்யும். அந்நாட்டின் இரு கண்கள் இராணி கர்மவதியும் ஜவஹர்பாயும்" என்று. நான் ஏதோ ஏற்றங்கொடுத்துப் பேசுகிறானென்றே நினைத்தேன். ஆனால் கடந்த ஒரு வாரமாய் மேவாரிலிருந்து வரும் செய்திகள் கேட்கக் கேட்க ஆச்சர்யமாக இருக்கிறது. ஒருநாள் விக்ரமன் நடனம் பார்த்துக்கொண்டிருந்த சமயம் தாயே எதிரில் வந்து "நீ அரசனாகத் தகுதியற்றவன். ஊரின் நிலைமை தெரியாமல், கூத்துப் பார்ப்பவன் அரசனா?" என்று சீறினாளாம். அதோடு நிற்கவில்லை. 'உன் கிரீடத்தைக் கழற்றிக் கீழே வை.

அல்லது உதயஸிம்மனுக்கு முடி சூட்டு' என்றாளாம். அவளல்லவா மகாராணி. நீதிக்கும் தர்மத்துக்கும் இடையில் தாய் என்றும் மகன்என்றும் உண்டா? அப்படிப் பட்ட சிறந்த வீரப் பெண்களில் ஒருவராகிய கர்மவதி தன்னை உடன்பிறப்பாய் ஏற்றுக்கொள்ளவேணுமென்று வளையலை அனுப்பியிருக்கிறாள்'...என்று சற்றே நிறுத்தினான் ஹுமாயூன்.

தாதர்கானுக்கு இந்தப் புகழுரைகளைக் கேட்க விருப்பமில்லை. இதுதான் சமயமென்று "ஷாஇன்ஷா! தங்களுக்குத் தெரியாத விஷயமில்லை. அவர்களைத் தாங்கள்பெண்களென்று கௌரவிக்கிறீர்கள். அவர்கள்பெண்கள் அல்ல; பேய்கள். நாட்டின் சுதந்தரத்திற்காக தன் ஏழு குழந்தைகளை வரிசையாய் முடி சூட்டிப் பலியிட்டாள் ஒருத்தி. அவளைப் பெண் என்பதா? பேய் என்பதா?" என்றான்.

பாதஷாவையே மறுத்துப் பேசும் தாதர்கானது நிலை சபையோருக்குத் துணுக்கென்றது. பாதஷா மீண்டும் கருணை ததும்பும் குரலில் பேசத் தொடங்கினான். "தாதர்கான், படபடக்காதே! ஆழ்ந்து யோசித்துப் பேசு. மேவார்நாட்டுப் பெண்மணிகளின் பெயர்கள் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை. "நாடு சுதந்திரம் பெற்றால் போதும். என் வீரக் குழந்தைகள் இறந்தாலும் குற்றமில்லை" என்று நினைத்த வீரத் தாயின் நெஞ்சத்தைப் புகழ்வதா? இகழ்வதா? கூசாமற் பேய் என்று சொல்லிவிட்டாயே, அது உன் படமையைத்தான் காட்டுகிறது. இன்று கர்மவதிதேவி இந்த வளையல்களின்மூலம் மனிதன் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் காண்பிக்க ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறாள். அதைப் பயன்படுத்திக் கொள்வது நம்முடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது ..'ராணா சங்கிராமசிம்மன் சாகாவீரன். அவனைப் பகைவனாய்ப் பெற்றதே ஒரு பெருமை. அவன் மனைவி இன்று என்னை உடன்பிறப்பாய் வரித்துவிட்டாள். அவள் கட்டளையைச் சிரமேல்தாங்கி, இதோ தயாராகிவிட்டேன்' என்று உங்கள் மகாராணியிடம் தெரிவிக்கலாம்" என்றான் மேவார் வீரனைநோக்கி. அகமும் முகமும் ஒருங்கே மலர மேவார் வீரன் வணங்கி வெளியே சென்றான்.

சபை முழுதும் நிசப்தம். மேலும் என்ன நடக்கப்போகின்றதோ வென்ற ஆச்சர்யம் ஒவ்வொருவர் முகத்திலும் தோன்றிற்று. மிகவும் தணிந்த குரலில், 'தாதர்கானின் தலைமையில் 5000 பேர் அடங்கிய சேனை நாளை சூர்யோதயத்தில் என்னுடன் டில்லியிலிருந்து புறப்படும்" என்ற சொற்கள் பாதுஷாவின் வாயினின்றும் எழுந்தன. தாதர்கானுடைய முகம் கருத்தது. எழுந்து இரண்டடி முன் வந்து "ஷாஇன்ஷா! என் வார்த்தைகளுக்குச் சற்றே செவிசாய்க்கவேண்டும். தீர ஆலோசித்துப் பிறகு தாங்கள் என்ன கட்டளையிட்டாலும் சரி. ராணி கர்மவதி, ஜவஹர்பாய் இவ்விருவரும் பகைவனது மனைவிகள் என்பது தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. இவர்கள் பொருட்டு நீங்கள் எதிர்க்கப் போவது குஜராத் பாதுஷா பகதூர்ஷா! நீங்கள் சொல்லுகின்ற "சகோதர தர்மம்" நம் இனத்தானாகிய பகதூர்ஷாவுக்கே உரியது. இனத்தானுக்கு உதவுவதுதான் உலக வழக்கம். பகைவனுக்காகப் பரிந்து இனத்தாரோடு சண்டையிட்டவனை இதுவரை கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இந்த மட்டில் அவன் மேவாரின் கொட்டத்தை ஒடுக்க முன்வந்தானே என்று சந்தோஷிப்பதை விடுத்து உதவி செய்ய முயல்வது...என்பதற்குள், பாதுஷா இடைமறுத்து,

"தாதர்கான்! நீ பேசுவது இராஜ தர்மமுமல்ல. மனுஷ்ய தர்மமுமல்ல. ஒரு பெண்பிள்ளை போர்க்களத்திலே நின்று தவிக்கிறாளென்றால் அவளுக்கு உதவி செய்வது நியாயமா? எதிர்ப்பது நியாயமா? நீ குறித்த சகோதர தர்மம் காரணமற்றுப் போர் தொடுத்த பகதூர்ஷாவுக்கு உரியதல்ல. வளையலை அனுப்பிவிட்டாள் என்றால் அவளுக்காக உயிரையே கொடுக்கவேண்டியதுதானே. மறு பேச்சுண்டா? நாளை சூர்யோதயத்திற்குள் பாதுஷாவின் சேனைகள் மேவாரை நோக்கிக் கிளம்பவேண்டியதுதான். மீன மேஷம் பார்க்க இதுசமயமல்ல.

மாறுத ஒற்றுமையும் அன்பும் விளங்குவதற்கேற்ற போதனைகளாகிற உறுதியான பிடிப்புகளையெல்லாம் **வாழ்க்கைத் துணைநலம்** என்ற அதிகாரத்தில் இசைத் துள்ளது இந்நூல். அன்பின் பெருமையையும் அவசியத்தையும்,

1. அன்பீனுமார்வ முடைமையது வீனும் நண்பெனு நாடாச்சிறப்பு
2. அன்புற்றமர்ந்த வழக்கென்ன வையகத் தின்புற்ரு ரெய்துஞ்சிறப்பு
3. அறத்திற்கே யன்புசார் பென்பவறியார் மறத்திற்கு ம·.தேதுணை.

எனத் தெளிவுபடுத்தியது தனியதிகாரத்தில்.

## துறவறவியல்

வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என்னும் இவ்விரு நிலையினர்க் குரிய அறத்தை விளக்குவதிவ் வியல். இது **விரதம் ஞானம்** என்னும் இரண்டு பிரிவில் அமைந் தது. வினை மாசு நீங்கி அந்தக்கரணங்கள் தூய்மை பெறுவதன் பொருட்டுக் காக்கப்படுவது விரதம். அந்தக்கரணங்கள் தூய்மையடைந்ததன்பின் உதிப்பது ஞானம். விரதம் பலவகையாகும், இங்கே சிறப்புடையன சில விளக்கப்படு கின்றன. அவை **அருளுடைமை, புலான் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள் ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னு செய்யாமை, கொல்லாமை** முதலியன.

தொடர்பு பற்ருது எல்லாவுயிர்களின்மேலும் செலுத்தப்படும் கருணையே அருள் - அருளுடைமையாலல்லது ஏனையவற்றைக் காப்பதரிது. ஆதலின் அரு ளுடைமை முதன்மையாயிற்று. இல்லறத்துக்கு அன்புடைமைபோல் துறவறத் துக்கு அருளுடைமை சிறந்தது. தொடர்புடையாரிடம் செலுத்தப்படும் அன்பு முதிர்ந்த நிலையில் அருளாகிறது. இதனை—

''அருளென்றுமன் பீன்குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு''

என்று பொருட்பாலில் அழகாக விளக்கியதிந் நூல்.

இவ்வியல் போதிப்பன பல. அவற்றுள்—

1. மன்னுயிரோம்பியருளாள் வார்க்கில்லென்ப தன்னுயி ரஞ்சும் வினை
2. கொல்லான் புலானை மறுத்தானைக் கைகூப்பி எல்லா வுலகுந் தொழும்
3. கூற்றங்குதித்தலுங் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு
4. மழித்தலும் நீட்டலும் வேண்டாவுலகம் பழித்த தொழித்து விடின்
5. வாய்மை யெனப்படுவதி யாதெனின்யா தொன்றும் தீமையிலாத சொலல்
6. பொய்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்
7. உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தான் உள்ளான் வெகுளியெனின்
8. இன்னு செய்தாரை யொறுத்தலவர்நாண நன்னயஞ் செய்துவிடல்.

**ஞானம்**-இதுவீடு பயக்கு முணர்வு-இதனை **நிலையாமை, துறவு, மெய்யுணர் தல், அவாவறுத்தல்** என்கிற நான்கதிகாரங்களில் சிறப்பாக விளக்கிய திந்நூல்- நிலையாமை யுணர்ந்தாலல்லது துறத்தலரிது-துறந்தாலல்லது மெய்யுணர்தல்அரிது- மெய்யுணர்ந்தாலல்லது அவாவறுத்தலரிது-அவாவறுத்தாலன்றி வீடடைவதரிது.

இந்த நியதியை உணர்ந்துய்வதற்குரிய போதனைகளில்,

1. குடும்பைதனித் தொழியப்புட் பறந்தற்றே உடம்போடு யிரிடைநட்பு
2. நெருநலுள னொருவனின்றில்லை யென்னும் பெருமை யுடைத்துலகு
3. பற்றுகபற்றற் ருன்பற்றினையப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு.
4. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே மெய்யுணர்விலாதவர்க்கு
5. ஆரா வியற்கையவாநீப் பினன்னிலே பேராவியற்கை தரும்.

இவையே சிறப்புடையவை.

இவ்வியலின் முடிவில் அமைந்த இச் செய்யுள் "அறம்-பொருள்-இன்பம் இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு!" என்ற ஔவையின் உபதேசத்தை விளக்கிய நிலையில் பேரின்பமடைய உபாயங் கூறியதாகிறது காண்க.

# புருஷகார வைபவம்

"கௌண்டின்ய"

## (1) வேதங்களும் சாஸ்திரங்களும் முழக்குவதென்ன ?

"அவனால்தான் . அவனை அடையமுடியும்" என்று வேதங்கள் கோஷிக்கின்றன. அது எப்படி? "நாயமாத்மா" என்று ஆரம்பிக்கும் சுருதியின்படி, ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன்தான் பரமாத்மா; மஹான்களிடத்தில் அவனைப்பற்றிய விசேஷங்களைக் கேட்டதால் அவனை அடையமுடியாது; கேட்ட அர்த்தத்தைச் சிந்தனை செய்தாலும் அடையமுடியாது; தியானத்தாலும் அடையமுடியாது:—அவனுடைய கிருபைதான் அவனை அடைவதற்கு ஸாதனம். எந்த ஜீவாத்மாவை அந்தப் பரமாத்மா மேல் விழுந்து தானாக அங்கீகரிக்கிறானோ, அவன்தான் அந்த ஸ்ரீமந் நாராயணனை அடையமுடியும்.

ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்திரத்தில் பகவான் கீழ்க்கண்டவாறு அருளியதாகக் கூறப்பட்டிருக்கிறது. சாக்ஷாத் ஸ்ரீய:பதியாயிருக்கிற நான் ஸ்வயமாக உபாயபூதனாயிருக்கிறேன். வசீகரிக்க வல்லவளான லக்ஷ்மி (பிராட்டியானவள்) புருஷகாரத்தால் என்னை அடைவிக்கிறாள். எனக்கு உபாயத்வமும், பிராட்டிக்குப் புருஷகாரத்வமுமாகிய இந்த விசேஷமானது வேதங்களில் கோஷிக்கப்படுகிறது.

எம்பெருமானையே உபாயமாகப் பற்றும் சில மஹான்கள் அவனுடைய திருவடித் தாமரைகளில் மிகவும் பிரீதியுடன் கைங்கர்யம் செய்து பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றி அவளுடைய கிருபையால் பகவானுடைய பொறுமைக்கு இலக்காகி அவனையே அடைவார்கள்.

## (2)நம்மாழ்வார் பிரார்த்திப்பதென்ன ?

திருப்புளிங்குடியில் எழுந்தருளியிருக்கும் பரந்தாமனைக் குறித்து நம்மாழ்வார் வேண்டுகிறார்.

> பண்டை நாளாலே நின் திருவருளும்
> பங்கயத்தாள் திருவருளும்
> கொண்டு, நின் கோயில் சீய்த்துப் பல்படிகால்
> குடிகுடி வழி வந்தாட்செய்யும்
> தொண்டரோர்க் கருளிச் சோதி வாய்திறந்துன்
> தாமரைக் கண்களால் நோக்காய்."

இதிலிருந்து எம்பெருமானின் திருவருள் மாத்திரம் போதாது; பிராட்டியின் திருவருளும் வேண்டும்--என்பது விளங்குகிறது.

## (3) லோகாசாரியன் அருளுவதென்ன ?

**"புருஷகாரமாம்போது க்ருபையும், பாரதந்தர்யமும், அநந்யார்ஹத்வமும் வேணும்" "ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் இரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும்" "ஸம்ச்லேஷ தசையில் ஈச்வரனைத் திருத்தும் விச்லேஷ தசையில் சேதனனைத் திருத்தும்" "உபதேசத்தாலே மீளாதபோது சேதனனை அருளாலே திருத்தும்; ஈச்வரனை அழகாலே திருத்தும்"**

இவை ஸ்ரீ லோகாசாரியன் அருளிய ஸ்ரீ வசனபூஷணத்தின் சூத்திரங்கள். இவற்றின் விவரமான வியாக்யானம் பிறகு கவனிப்போம். இச்சூத்திரங்களின் தாத்பர்யம் ஒருவாறு விளங்குகிறதல்லவா? லோகமாதாவாகிய பிராட்டியின் அருளாலே அகிலலோக நாயகனின் கிருபைக்குச் சேதனர்களாகிய நாம் பாத்திரமாகிறோம்.

## (4)உலக ரீதியில் நாம் காண்பது என்ன ?

உலக ரீதியில் நாம் காணும் அனுபவமும் இந்தப் புருஷகார வைபவத்தை நிரூபிக்கிறது. ஒரு பெரிய மனுஷ்யரின் தயவுவேண்டியிருந்தால், அவரை அடுத்துள்ள ஆப்தமானவர்களின் தயவை நாம் முதலில் சாதாரணமாகக் கோருகிறோம். அதேபோல் எம்பெருமான் கடாக்ஷத்தை வேண்டுகிற நாம் பிராட்டியின் கிருபையை முதலில் பிரார்த்திக்கிறோம்.

மேற்கூறிய உதாரணத்தில் வேறொருவரின் சிபார்சு இல்லாமலே மேலே சொன்ன பிரபுவின் தயவு தானாக ஏற்பட்டால், அப்பொழுது புருஷகாரம் அவசியமில்லை. அதே மாதிரி கிருஷ்ணனின் தயவு நேராக ஏற்பட்டு (அவனே புருஷகாரத்தை ஏற்றுக்கொண்டதால்தான்) அர்ஜுனனுக்குப் பிராட்டியை வேண்டிக்கொள்ளும் அவசியம் ஏற்படவில்லை. கிருஷ்ணனையே பிரார்த்தித்தான்: கீதையும் பிறந்தது. ஆனால் அர்ஜுனனைப் போல் அபூர்வ அதிர்ஷ்டசாலிகளா நாம்? நமக்கெல்லாம் பிராட்டியின் புருஷகாரமே ரொம்பவும் அவசியமானது.

---

புருஷகாரம்--இடையே நின்று பரிந்து பேசுவது

# 7

**ஆனிரைகள் மேய்த்துவந்த அச்சுதனே போற்றி**
**வானவர்க் கன்றமுதந் தந்த மாநிதியே போற்றி**
**பஞ்சவர்க்கு தூதுசென்ற பரந்தாமனே போற்றி**
**கஞ்சனுக்குக் காலனான கண்மணியே போற்றி.**

என்ற பாடலை ரேவதி வெகு அத்புதமாகப் பாடிக்கொண்டே புஷ்பம் கட்டிக் கொண்டிருந்தாள். அதே சமயம் தபால்காரன் தபால்களை கொடுத்துச் சென்றான். அதன் மேல்விலாசம் தங்கள் வீட்டுச் சமையல்காரம்மாளாகிய **ராஜம்மாளுக்கு** எழுதியிருந்ததால் ரேவதி கடிதத்துடன் சமையலறைக்கு வந்து "மாமி! உங்களுக்குக் கடிதங்கள் வந்திருக்கு; இந்தாருங்கள்" என்றாள்.

ராஜ:—எனக்கா! கடிதங்களா! ஒரே சமயத்தில் யார் யாரிடமிருந்து வந்திருக்கும்? எங்கேம்மா! நீயே படித்துச் சொல்லு. எனக்கென்ன தடதட வென்று படிக்கவருமா, பாழா!... என்றாள். உடனே ரேவதி கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"அம்மாவுக்கு நமஸ்காரம்,

உனக்கு நான் மிகவும் சந்தோஷகரமான விஷயத்தை இக்கடிதத்தின் மூலம் தெரிவிக்கிறேன். இதைக் கேட்டு நீ மிகமிக அகமகிழ்வாய் என்று நான் நம்புகிறேன். அதாவது ஆகாசபுரி ரேடியோவில் 15-ந் தேதி என்னைப் பாடுவதற்கு அழைத்திருக்கிறார்கள். ஒருமணி காலங்கூட இல்லை; அதற்கு 30 ரூபாய் கொடுக்கிறார்கள். மாமாவுக்குச் சந்தோஷம் சொல்லமுடியாது. என்னுடைய மதுரகீதத்தினால் நமக்குப் பெரிய புகழும் கீர்த்தியும் வருவதோடு வறுமையே நம்மைவிட்டு மறைந்துவிடுமாம். நீ இனிமேல் இத்தகைய கேவலமான சமையல் வேலைக்குப் போகவேண்டியது அவச்யமே இல்லையாம். மாமா இப்படி எழுதச் சொன்னார். மாதம் ஒருமுறை பாடும் சந்தர்ப்பம் கொடுத்தால் நமக்கென்னம்மா குறைவு? நீ இம்மாதிரி வேலை செய்து பார்க்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. பகவான் நமது பரிதாப நிலையைக்கண்டு மனமிரங்கி இந்த புதிய வழியைக்காட்டியிருக்கிறாராகையால் நீ உடனே அவர்களிடம் கணக்குத் தீர்த்துக்கொண்டு வந்துவிடு. நீ கூடவிருந்தே கேட்கலாம்.

உன் ப்ரிய புதல்வி,
**க்ருபாவதி.**"

இதைப் படித்த ரேவதி சந்தோஷத்தினால் முகம் மலர்ந்து "பேஷ்...மாமீ! வயிற்றை யலம்பி மாணிக்கத்தைத்தான் பெற்றீர்கள். பெண் இருந்தாலும் இப்படியல்லவா இருக்கவேண்டும். எங்கம்மாவும் பணத்தை ஆயிரமாயிரமாகக் கொட்டிச் சங்கீதத்தைக் கற்றுவைக்கிறாள். அது எங்கள் குடும்ப சாபமோ! என்னவோ! ஒருவருக்கும் பலிக்கவில்லை. **வந்ததும் பேய்! வளர்த்ததும் பேய்!! கொண்டுவந்ததும் கொள்ளிவாய்ப் பேய்!!!** என்கிற பழமொழியை எங்கம்மாளுக்கு நிதர்சனம் செய்யும் முறையில் எங்கள் அண்ணன் மனைவியும் வந்திருக்கிறாள். நீங்கள் அதிர்ஷ்டசாலி; ஒருவிதமான ப்ரயத்தனமும் செய்யாமலேயே இந்த அதிர்ஷ்டம் கிடைத்துவிட்டது." என்று தனது அபிப்ராயத்தை மூச்சுக்கூட விடாமல் தன் கடமை என்று தானே எண்ணி சொல்வதைக் கேட்ட ராஜம்மாளின் முகம் கருத்துச் சுண்டியது.

ரேவதியின் தாயார் அங்கு வந்தாள். இந்த கடித விஷயமறிந்து அபாரமான சந்தோஷத்தையடைந்து, "ராஜம்மா! உனக்கு உன் மகளால் கஷ்டம் நிவர்த்தியாகிவிட்டது போ! குழந்தைகள் இருந்தால் இம்மாதிரியல்லவோ புத்திசாலிகளாய் இருக்கவேண்டும்" என்று முடிப்பதற்குள் ராஜம்மாள், "அம்மா! நீங்கள் சொல்வதெல்லாம் உங்களைப் போன்ற செல்வவந்தர்களுக்கு அடுக்குமே யன்றி எங்களைப்போன்ற ஏழைகளுக்குத் தகாதம்மா! எங்கள் நிலைமைக்கும் இந்த மாதிரி ப்ரவர்த்தகத்திற்கும் எத்தனையோ தூரமிருக்கிறது. ஏதோ, தகப்பன்

இல்லாத பெண்ணை புண்ணியத்திற்காக என் தமயனும் மன்னியும் வளர்க்கிறார்கள். எங்களுக்குத் தகுந்த இடமாக ஒரு வரனைப் பார்த்து அவளைக் கல்யாணம் செய்துவைத்து எங்கள் பாரத்தைக் குறைத்துக் கொள்வதைவிட்டு இம்மாதிரி பாடுவதும் ஆடுவதும் தகுமாம்மா! இதனாலேயே அந்தப் பெண்ணை யாரும் கல்யாணம் செய்யமறுத்தால் நான் எங்கே சாவது!

பெரியம்மாள் இடைமறுத்து...“போடீ பயித்தியக்காரி! என்னவோ ப்ரமாத மான விஷயத்தைச் சொல்லப்போகிறாய் என்று பார்த்தேன். ரேடியோவில் பாடுவதை எந்த ப்ரகஸ்பதிகள் விகல்பமாக நினைப்பார்கள் என்று நீ இம்மாதிரி மூக்காலழுகிறாய்? எத்தனை பெரிய பெரிய உயர்ந்த குடும்பத்துச் சீமாட்டிக ளெல்லாம் ரேடியோவில் பாடுவதையும், பேசுவதையும், நிகழ்ச்சிகள் நடத்து வதையும் நீ கேட்கவில்லையா! இதில் என்ன குற்றத்தை நீ கண்டுவிட்டதுபோல் பேத்துகிறாய்! ஒவ்வொருவர் இதே ரேடியோவில் பாடுவதற்காக எத்தனை கோகர் ணம் கஜகர்ணம் போடுகிறார்கள் உனக்குத் தெரியுமா! அடுப்பங்கரையிலுள்ள நீ ஏதோ பழங்காலத்துமாதிரி பேசுகிறாய். தம்தம் வீட்டுப் பெண்கள் ஒருமுறை யாவது ரேடியோவில் பாடினால் போதும், பேசினால் போதும்; ஏதாவதொரு நிகழ்ச்சி பாகத்திலாவது குரல் கேட்டாலும் போதும் என்கிற மகத்தான ஆசை யினால் எத்தனை சிபார்சு கடிதங்கள் ரேடியோ நிலயத்திற்குப் பறக்கின்றன தெரியுமா! நேரில்கூட சிலர் தம்முடைய மனைவியை...பெண்களை...சகோ தரியை...அழைத்துக்கொண்டுபோய் பாடச்செய்துப் பல்லிளித்து சலாம் குலாம் போட்டு அசட்டுத்தனம் வழிய ஏதேதோ செய்கிறார்கள். அதிலும் சில துரதிருஷ்ட சாலிகளுக்குப் பலிக்காமலேயே போய்விடுகிறது. தனக்குத் தெரிந்த சங்கீதத்தை நல்ல முறையில் உபயோகிப்பதில் என்ன குற்றம் என்று நீ இப்படி உளறுகிறாய்?

**ராஜ:**—அம்மா! குற்றமோ! குறையோ! பணக்காரர்கள் எது செய் தாலும் அது பந்திக்கு உகந்ததாகிவிடும். ஏழைகள் எது செய்தாலும் சந்தியில் சிரித்துவிடும். இதுதான் எனக்குத் தெரிகிறது. இவள் பாடுவது; இதை கண்ட புருஷர்களும் கேட்பதென்றால் அது...

**பெரி:**—ராஜம்! நீ சர்வ முட்டாள் என்பதை நான் இப்போதுதான் அறி கிறேன். கலாரசனை சிறிதும் அறியாத மூடமாக நீ இருக்கிறாய், இவள் பாடு வதை ஒருவரும் கேட்கக்கூடாது என்கிற கொள்கையையுடைய நீயே யோசித் துப்பாரு. இந்த காலத்தில் பெரிய பெண்களாகிய பிறகு கல்யாணம் செய்கிறோம். அதிலும் ஒரேவேளை கல்யாணம். முன்காலத்தில் 5 நாளைய கல்யாணத்தில் நலங்கு என்றும், ஊஞ்சல் என்றும் உட்காரவைத்து ஊர் புருஷர்களும் மற்ற இதர புருஷர்களும் கும்பல் கூடியிருக்கும் சபையில் நேருக்கு நேராக உட் கார்ந்து அபஸ்வரமோ, சுஸ்வரமோ கூச்சமின்றிப் பாடுவதில்லையா! அதில் ஒரு குற்றமும் இல்லையா! அதைவிட இது கெட்டுவிட்டதா!

இதோபாரு ராஜம்! நீ இப்படி மூடத்தனமாகப் பேசி குழந்தையின் கலை வளர்ச்சியைக் கொலைசெய்யக்கூடாது. அக்காலத்தில் இம்மாதிரியான ரேடியோ, க்ராமபோன் முதலிய ஸாதனங்கள் எதுவுமில்லை என்பது மறந்தாயோ! அப் போது இம்மாதிரி இருந்திருக்குமாயின் பாட்டிமார்கூட கட்டாயம் முறுக்கு சுற்றும்விதமும் பொறிவிளங்காய் உருண்டை செய்யும் விதமும் ரேடியோவில் பேசியிருப்பதோடு, ப்ளேட்டிலும் பல கும்மி பாட்டுக்களைப் பாடியே இருப் பார்கள். அக்காலத்தில் இல்லாத ஸாதனங்களைக்கொண்டு பேசுவது தகுதியே இல்லை. அசட்டுத்தனம் செய்யாதே—என்றாள்.

ராஜம்மாளுக்கு மனம் ஒன்றும் நிம்மதி கொள்ளவில்லை. மற்றொரு கடிதத் தைப் படிக்கச் சொன்னாள். அது வருமாறு:—

“அக்காவுக்கு நமஸ்காரம், உபயக்ஷேமம்.

உங்க தமயனுக்கு வரவர மூளையே மழுங்கி வருகிறது. தகப்பனற்ற பரதேசிப் பெண்ணை அவர் உருப்படச் செய்யப்போவதில்லை. லேடி

யோவா ... கிடியோவா ... அதில் பாடுவதற்கு ஏற்பாடாகிவிட்டதாம். எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இந்தப் பெண்ணை ஒருவன் கட்டவேண்டுமா! வேண்டாமா! கன்னிமாடந்தான் தயார் செய்யப்போகிறாரோ, கோயிலில் தான் முத்திரைப் போட்டுவிடுவாரோ! தெரியாது. இம்மாதிரி அதிப்ரவர்த்தியில் இறங்கிவிட்டால் யார் இதைப்பற்றி பேசுவது? உங்கள் சின்ன அண்ணா பிள்ளை ராமுவுக்கு இந்த விவகாரமெல்லாம் பிடிக்காது என்பது தெரிந்தும் இம்மாதிரி கூத்தாடிமுறையில் பெண்ணை வளர்த்தால் யார் இதற்குப் பாடுபடுவது? நான் எத்தனை சொல்லியும் உங்கள் தமயனார் காதிலும் ஏறவில்லை.

பாழாப்போன சினிமா ஒன்று வந்தபிறகு சிறியவயதில் ஒரு சினிமா, இரண்டு சினிமாவில் நடித்துவிட்ட குற்றத்தினாலேயே எத்தனை குடும்பங்களில் அந்தப் பெண்களை வைத்துக்கொண்டு கல்யாணமாகாது திண்டாடுவதை நாம் பார்க்கவில்லையா! அப்படித்தான் கிருபாவதியின் கதியும் ஆகப் போகிறது. நான் நேரில் அவளிடமே கண்டித்தும் பார்த்தேன். மாமா கொடுக்கும் செல்லத்தில் என் வார்த்தையைக் காற்றில் விட்டுவிட்டாள். பாட்டுக்கள் அமர்க்களமாக பாடமாகிறது. இதற்கு ஒப்புக்கொள்ளக் கூடாது என்று நீங்கள் உடனே உங்கள் தமயனுக்கும் பெண்ணுக்கும் கடிதங்கள் எழுதவும். என்மேல் கோபிக்கவேண்டாம்.

உங்கள் ப்ரிய,

**செல்லம்.''**

இதைப் படித்ததும் ரேவதியும் அவள் தாயும் சிரித்தார்கள், "சரிதான். உனக்குமேல் ப்ரகஸ்பதிபோலிருக்கிறதே உங்க மன்னி! சினிமாவில் நடித்துப் பேர் கெடுவதற்கும், கவுரவமான ரேடியோவில் பாடுவதற்கும் ஒன்றுகூட்டிப் பேசினால் எனக்குக் கோபம்வரும். விஷயம் தெரியாவிட்டால் எதை வேண்டுமாயினும் உளறிவிடுவது என்று அர்த்தமா!'' என்று சற்று கடுமையாக கோபித்துக்கொண்டு போய்விட்டாள்.

ராஜம்மாளுக்கோ, எழுதப்படிக்க அதிகம் தெரியாது. பிறருடைய தயவைக் கோரித்தான் நடக்கவேண்டும். தனக்கு நேர் விரோதமாகப் பேசும் இவர்களிடம் தான் விஷயத்தைச் சொல்லி எழுதச் செய்வது நடக்காத காரியம் என்று மனத்தில் பட்டுவிட்டது. அதனால் அவ்வளவோடு சம்பாஷணையை நிறுத்திக்கொண்டு தன் வேலைகள் முடிந்ததும் கோடிவீட்டுக் கோமளத்தினிடம் சாவகாசமாகச் சென்று தன் குறைகளைத் தெரிவித்தாள்.

அந்த புண்ணியவதி ஊர்வம்பு பேசி அகமகிழ்வதிலேயே அதிக ப்ரீதி கொண்டவள். அதோடுமட்டுமின்றி ஒரு வீட்டு விஷயத்தை இன்னொரு வீட்டில் முடிபோட்டுக் கலகத்தை விளைவித்து வேடிக்கை பார்ப்பதை சொர்க்கபோகமாகக் கருதும் அத்புதமான குணமுடையவளாதலால் ராஜம்மாள் சொல்லியதோடு தன் கைச் சரக்குகளும்கூடச் சேர்த்து வெகு தடபுடலாகக் கடிதம் எழுதி தபாலில் போட்டுவிட்டாள். அதற்குப் பிறகே ராஜம்மாளுக்கு ஒரு பெரிய பாரம் தன் நெஞ்சைவிட்டு இறங்கியதுபோல் தோன்றியது. தனக்கும் தன் மகளுக்கும் ஏற்படவிருந்த மகத்தான அவமானத்தையும், இழிவையும் தான் தடுத்துவிட்டதாக ஒரு த்ருப்தி அவள் மனத்தில் ஊசலாடியது.

## 8

"நாகராஜா! டேய்!... உதயமாகி ஒரு ஜாமமாகிறது. தூக்கத்தைப் பார்த்தாயா? எழுந்திரடா!... இன்று ஞாயிற்றுக்கிழமையை மறந்துவிட்டாயா! நேரமாயிற்று. எழுந்து காப்பி குடித்துவிட்டுவா! உம்'' ... என்று முரளியே எழுப்பினான்.

தினம் அதிகாலையில் எழுந்து ஆபீஸ் வேலையைக் கவனிக்கும் ராஜன் ஞாயிற்றுக்கிழமை மட்டும் 8 மணிவரையில் தூங்குவான். இன்று தான் ப்ளான் செய்திருந்தபடி போவதை மறந்து தூங்கியதால் முரளியே வந்து எழுப்பினான். அலறிக்கொண்டு எழுந்த ராஜன் 5 நிமிஷத்தில் கிளம்பினான்.

இருவரும் காரிலேயே குறித்த வீதிக்குச் சென்று யார் வரவையோ எதிர்பார்ப்பவர்கள்போல் காரிலேயே உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சாதாரண ஜட்காவண்டி யொன்று குறித்த வீட்டுவாசலில் வந்து நின்றது. முதலில் வயது முதிர்ந்த ஒருவர் இறங்கினர். அடுத்ததும், தம்பூராவை வண்டியிலிருந்து அவர் எடுத்துக்கொண்டதும், அழகு வெள்ளம் புரண்டு ஓடுவதுபோன்ற அதியத்புத ஜகன்மோகன வடிவம் என்றால் மிகையாகாது, அத்தகைய சுந்தராங்கி சித்திரப்பாவைபோன்று இறங்கினாள்.

அந்த வீட்டின் உள்ளிருந்து வந்த ஒரு பெண்மணி, "வாம்மா! க்ருபாவா? உன் பாட்டைக் கேட்க ஊர் ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மாமி வரவில்லையா!" என்றாள். பூங்கொடியோ! அன்னப்பாவையோ! ஆடும்மயிலோ! என்று அதிசயிக்கும் வண்ணம் அப் பாவை முகத்தில் வசீகரமும் கம்பீரமும் தாண்டவமாட காண்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்படி ஒரு புன்னகை செய்தவாறு "மாமிக்கு நாலுநாளாய் ஜுரம். அதனால் மாமா மட்டும் வந்தார்." என்றாள்.

இந்த சாதாரணமான வார்த்தைகள் சொல்லியபோது சங்கீதம் ஒலிப்பது போன்ற ஒரு தனித்த இனிமை அந்த பேச்சிலேயே தவழ்ந்தது, எதிர் சாரியில் காருக்குள்ளிருந்து கவனித்த முரளீதரனின் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்தது. அந்த அழகில் அப்படியே மயங்கிப்போய் தேன்குடித்த நரிபோலும் காணாது கண்ட தரித்திரன்போலும் ஆனான். "பகவான் இந்த அனர்கமான கனியை, தேவாமிருதத்தை நமக்குக் கொடுக்கவேண்டுமே!" என்று மனத்திற்குள் ஒரு புதிய உணர்ச்சியும் பேராவலும் குடிகொண்டன.

அவன் தாயார் கல்யாணத்திற்குப் பெண்பார்க்க ஆரம்பித்ததுமுதல் இதுவரையில் நூற்றுக் கணக்கில் பெண்களைப் பார்த்திருப்பானேயன்றி ஒன்று இரண்டல்ல. அத்தனை பெண்களுக்கும் சிகரம்வைத்தது போன்ற அழகும் வசீகரமும் இந்த பெண்ணிடத்தில்தான் இருக்கிறது என்ற உறுதி முரளிக்கு ஊர்ஜிதமாயிற்று.

பெண் மிகவும் சாதாரணமான ஓர் மில் சேலை கட்டிக்கொண்டு தலையைப் பின்னி கருநாகம் படுத்திருப்பதுபோல் ஜடை புரள அதில் ஒரு கொத்து கதம்ப புஷ்பம் அணிந்திருந்தாள். மிகவும் சொல்பமான ஆபரணங்களே அவள் மேனியிலிருப்பினும் அந்த ஆபரணங்களுக்கு அழகுகொடுக்கும் பேரெழிலுடன் அம்மங்கை ப்ரகாசித்தாள்.

முரளிக்கு இப்போதே போய் நேரில் பேசி காரியத்தை முடித்துவிடலாமா! என்ற ஆசை துடிக்கிறது...'ராஜா! எப்படியடா இருக்கிறாள்?' என்றுகேட்டான்.

ராஜ:—உம்...கேட்பானேன். மன்மதனுக்கேற்ற ரதி அவளேதான். ஜகன்மோகினி தேவதை என்றால் மிகையாகாது, அழகுவெள்ளம் புரண்டு ஓர் மங்கையின் உருவமாக வந்திருக்கிறது என்றால் மிகவும் பொருந்தும். சரி. உன் அகத்தினழகு முகத்திலேயே தெரிகிறது. இன்று சங்கீதத்தையும் கேட்டுவிடுவோம். பிறகு காரியத்தை முடிக்கலாம். பெண்ணைப்பார்த்தால் உங்களுக்குச் சரியான பணக்காரர்களாக இருப்பதாய் தெரியவில்லை. அதனால் சற்று சந்தேகப்படுகிறேன். உன் தாயார் சம்மதிக்கவேண்டுமே...என்று இழுத்தான்.

முரா:—போடா போ! எதையோ ஒரு சொட்டுசொல்ல இப்போதே ஆரம்பித்துவிட்டாய். என் தாயாருக்கும் பயப்படமாட்டேன். என் தகப்பனருக்கும் அசையமாட்டேன். என்னைவிட என் தாயார்தானே அதிகமான அழகைத் தேடுகிறாள். இந்த பெண்ணைப் பார்த்தால் அவள் விடுவாளா என்ன! பணம்! பணம்! என்று அடித்துக்கொள்வானே! எனக்குப் பணமில்லையா! இப்போதே எனக்கு 200 சம்பளம். என் தந்தை பென்ஷன் வாங்கிக்கொண்டு உட்கார்ந்தால்கூட 500 ரூபாய் அனாயாஸமாக வரும். இதுவரையில் சேர்ந்துகிடப்பதும் பிதுரார்ஜிதமும்

ஒரு லகாரத்திற்குக் குறையாது, நான்கு ஆத்மாக்கள் இதை வைத்துக்கொண்டு ஆண்டால் போதாதா!

நா:—அப்பா! என்றுமே நான்கு ஆத்மாக்கள் என்று நினைத்தாயா! அடுத்த வருஷ முதல் சுபயோக சுபலக்னத்தில் ஸ்ரீமதி க்ருபாவதி தேவி இன்னும் சில ஆத்மாக்களை உற்பத்திசெய்ய ஆரம்பித்துவிடமாட்டாளா! நீ ஆயிரம் ஆயிரமாக சம்பாதித்தால்கூட போதாது. தெரியுமா!

மு:—சரிதாண்டா! கேலி செய்வதற்கு சமயம் பிறகு இருக்கிறது. இப்போது நாம் என்ன செய்யலாம் சொல்லு.

ராஜ:—முரளீ! நீ என்னவிருந்தாலும் அதிர்ஷ்டக்காரண்டா! அதோ ஒரு சாமான் வண்டி வருகிறதே, அதன்கூட ஒருவர் வருகிருரே அவர் யார்தெரிகிறதா!

மு:—ஆமாம்... உனக்கு தூரத்து பந்துவென்று தெரிகிறது. ஏன் அதற்கென்ன...

நாக:—என்னவா! வண்டி எங்கே நிற்கிறதோ பார்க்கலாம் இரு. இதே தெருவில் நிற்பதாயிருந்தால் நாம் தாராளமாக அந்த வீட்டிலிருந்துகொண்டு பெண்ணைப் பார்க்கமுடியும்...பார்த்தாயா? நான்தான் அப்போதே சொன்னேனே! அந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டுவாசலிலேயே நிற்கிறது...சரிதான். இனிமேல் கவலையே இல்லை—என்று கூறியவாறு அந்த மனிதனிடம்போய் "என்னடா சாமீ! இந்த வீட்டிற்குக் குடிவருகிருயா என்ன?"...என்ருன்.

சாமி:—ஆமாம். அந்த வீட்டில் சௌகரியக் குறைவு. அதோடு ஒட்டுக் குடித்தனம் பிடிக்கவில்லை. இது தனிவீடு. அப்படியே 30 ரூபாயிக்கு எடுத்துக் கொண்டேன். சவுக்யமா! அம்மா, அப்பா ஊரில்தானிருக்கிருர்களா? என்று யோக க்ஷேமம் விசாரித்தபடியே சாமான்களை இறக்கினன்.

நாக:—சரி...நான் பார்த்துக்கொள்கிறேன். நீ போய் மற்ற சாமான்களைக் கொண்டுவா!—என்று அவனை அனுப்பிவிட்டு. முரளியை அங்கு அழைத்துப் போனன். இந்த வீட்டின் மாடியிலிருந்து அந்த வீட்டின் மாடி மத்தியில் உள்ள இடைவெளியால் நன்ருகத் தெரிந்தது. முரளியின் சந்தோஷம் அதிகரித்தது.

இந்த மாடியிலிருந்து எட்டிப்பார்த்தான். வந்த பெண் காப்பி குடிக்கும் வேலையிலிருந்தாள். சுமார் அரைமணி நேரங்கழித்து தம்பூராவுடன் மாடியிலுள்ள அறைக்குவந்தாள். இரவு தூங்காமல் களைப்புடன் காலையில் வண்டியிலிறங்கியபோதே மன்மத சுந்தராங்கியாகத் தோன்றியவள் இப்போது குளித்துவிட்டு நீலநிறப்பட்டாடை உடுத்தி சுறுசுறுப்பாக வரும் அழகைக்கண்டு முரளி மோகித்து மூர்ச்சையேபோய்விடுவான்போலானன்.

ஜன்னலால் இவர்கள் பார்ப்பதை அவர்களறிய முடியாது. அவள் மாமா "க்ருபா! சரியாக ச்ருதி சேர்த்துக்கொள்ளு. 9 அடிக்கப்போகிறது. அவர்கள் வரும் நேரமாகிறது" என்ருர். அவ்வீட்டுக்காரியும் சிரித்துக்கொண்டே" யார் மாமா வரப்போகிருர்கள்?" என்ருள்.

183078

மாமா:—க்ருபாவைப் பார்ப்பதற்கு ஒரு பணக்கார வாலிபர் வரப்போகிருர். நல்லவரன். க்ருபாவின் அதிர்ஷ்டம் இதில் தெரியவேண்டும், சங்கீதமென்ருல் அவருக்கு உயிராம்; மகா ரஸிகராம். நேரில் வந்துபார்த்து விவாகத்திற்கு ஏற்பாடு செய்வதாகக் கடிதம் எழுதியிருக்கிருர்.

வீட்டுக்காரி:—அப்படியா! மெத்த சந்தோஷம். கல்யாணச் சாப்பாடு சமீபத்திலேயே கிடைக்கும்—என்ருள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட முரளியின் மண்டையில் ஓங்கி அடித்தது போல் ஒரு அதிர்ச்சி உண்டாகியது. நின்றவிடத்திலிருந்தே சாய்ந்துவிட்டான். இதைக்கண்ட நாகராஜன் "என்னடா முரளீ! ஐயையோ! மயக்கமா என்னடா!" என்று அலறினன்.

மு:—மயக்கமும் இல்லே மண்ணுமில்லே. விஷயம் காய்த்துவிட்டது. சற்று காதுகொடுத்து கேளு. வேறுயாரோ பார்க்க வரப்போகிருர்களாம். நாம் எதற்கு இங்கு இஞ்சிதின்ற குரங்குபோல் உட்கார்ந்திருக்கவேண்டும். வா, நல்ல வேளை

யில்தான் புறப்பட்டோம். வீடுபோகலாம் வா…ஆசை எல்லாம் 5 நிமிஷத்தில் நிராசையாகிவிட்டது. எனக்குப் போட்டிக்கு எந்த பாவி காத்திருந்தானே! அதிலும் பணக்காரனும். தானாக வலுவில் எழுதியிருக்கிறன். விடவேமாட்டான்…வா…எழுந்திரு…

நாக:—என்னடா தர்மசங்கடமாய்விட்டது. நான் காவலிருப்பதாகக் கூறி அவனையும் அனுப்பிவிட்டேன். இத்தனை சாமான்களையும் போட்டுவிட்டு எப்படியப்பா போய்விடுவது…ஏதோ குடிமுழுகிவிட்டதுபோல் புலம்புகிறயே! இந்த ரதி இல்லாவிட்டால் இவளுக்குமேல் ரதி இன்னெருத்தி வராமலாபோவாள்…

முரு:—சரிதாண்டா! வேளை சமயமில்லாது பரிகஸிப்பதுதான் உனக்குத் தெரியும். என்னல் முடியவில்லை. நான் போகிறேன்; நீ வேண்டுமானல் பிறகு வா… என்று கூறியவாறு கிளம்பினன்.

அதே சமயம் அப் பெண்மணி தம்பூரா ச்ருதியை ஸ்வரசுத்தமாக சேர்த்துக்கொண்டு **ஸாவேரி** ராகத்தில் **"ராமபாண"** என்கிற அதி அத்புதமான கீர்த்தனையை தங்கத்திற்கு மெருகு கொடுத்ததுபோன்றும், வைரத்திற்கு சாணைபிடித்ததுபோன்றும் ஜிலுஜிலுப்புடன் பாடவாரம்பித்தாள்.

**பட்டமரமும் பால்வடிக்கும்; விட்டமனமும் துளிர்த்தெழும்.** என்பதுபோல் இந்த தேவகானத்தைக் கேட்டு முரளியின் மனது கட்டுக்கடங்காது தவிக்கின்றது. "அன்று பாடிய பாட்டைக் கேட்டே மெய்மறந்தோமோ! இதன் காலில் அதைக் கட்டியடிக்கவேண்டும். ஐயோ! இந்த அனர்கமான வஸ்து எனக்குக் கிடைக்காமல் போவதற்கா கடவுள் இதைக் காட்டி ஏமாற்றினர்?" என்று நினைக்கும்போது கண்ணில் நீரும் ததும்பியது.

நாக:—முரளீ! என் இப்படி அவஸ்தைப்படுகிறய்? பார்க்கவருபவனுக்கெல்லாம் ப்ராப்தம் வேண்டாமா! ஒருவன் வரப்போகிறன் என்கிறபோதே முடிந்துவிட்டதாக அர்த்தமா! நீ பதினயிரம் பெண்களைப் பார்த்தாயே முடிந்ததா! பொறுமையை இழக்காதே! எவன் வருகிறனே வந்துவிட்டுப் போகட்டும். அந்த அத்புத கானத்தையாவது சற்றுநேரம் கேட்டுக்கொண்டிரு. நான் போய் சாமியை சீக்கிரம் வரச்சொல்லுகிறேன். அவன் வந்ததும் நீ வீட்டிற்குப் போகலாம்—என்று கூறியவாறு போனன். முரளிக்குப் போகவும் மனமில்லை. இருக்கவும் சகிக்கவில்லை. எனினும் சங்கீதத்தைவிட்டு அசைய மனமில்லாது அதற்கு இசைந்தான். சங்கீதத்தின் ஆகர்ஷண சக்தி அவனைப் பூராவும் இழுத்துவிட்டது.

## 9

பும்! பும்! என்று ஹாரனடித்துக்கொண்டே கார் வந்து வாசலில் நின்றது. இந்த சங்கீதத்தின் இன்னிசையிலும் பைசாசத்தின் அலறல்போல் மோட்டாரின் ஹாரன் கேட்ட உடனே முரளியின் வயிற்றில் புளியைக்கரைத்து குபீரென்றது. இன்பராணியை அடையும் புண்ணியவான் எவனே வந்துவிட்டான் என்று நினைக்கும்போதே இவனுக்குச் சப்பென்று தோன்றியது,

பளபளப்பான, தன் மோட்டாரைவிட மிகவும் உயர்ந்ததான கார் வந்து நின்றது கண்டு முரளியின் வயிற்றெரிச்சல் அதிகரித்தது. பல்லைக் கடிக்கின்றன். முகத்தில் கூறத்திறமற்ற வேதனை தாண்டவமாடுகிறது. கார் நின்ற உடனே க்ருபாவின் மாமாவாகிய சதாசிவன் காரருகில் வந்து வெகுவினயத்துடனும் மரியாதையாயும் "வாருங்கள்! வாருங்கள். உங்கள் கடிதத்தைப்பார்த்து நான் பரம சந்தோஷமடைந்தேன். கடிதம்வந்து நான் படிக்கும்போது சுபமாக சந்தனமும் அக்ஷதையும் எடுத்துக்கொண்டு கல்யாணத்திற்கு அழைக்க வந்தார்கள். அந்த ஆச்சரியமான சகுனமே எங்களுக்குச் சர்வசம்மதமாகிவிட்டது" என்று தன் மனத்திலுள்ள ஆனந்தம் பூராவும் காட்டிப்பேசியவாறு காரின் கதவைத் தானேதிறந்தார்.

"பகவத்கிருபையிருந்து நடக்கவேண்டும். சகலமும் அவனருள். எங்களுக்கும் இந்த வரனைப்பற்றிக் கேட்டபோதே கோயில் மணி கணகணவென்று

அடித்ததுகண்டு நாங்கள் எல்லோரும் ப்ரம்மானந்த மடைந்தோம்'' என்று ஒருவர் கூறினர்.

இந்த சம்பாஷணைகள் முரளியின் எரிச்சலைத் தூண்டிக்கொண்டே இருந்தன. அதையடக்கியவாறு நின்றிருக்கும்போது முதலில் ஒரு கிழவர் இறங்கினர். அடுத்து இறங்கிய ஆசாமியைப் பார்த்ததும் முரளி திடுக்கிட்டுத் தம்பித்தான். இவனை ஆச்சரியக் கடலில் மூழ்கச்செய்த மனிதன் வேறு யாருமில்லை. இவனுடைய ஆப்த நண்பன் நாகராஜன்தான். அவனுக்குப் பிறகு அவன் மனைவி, தனது தாயார், தகப்பனர் ஆகியவர்கள் இறங்கியதைப் பார்த்து இவனுக்கு இன்னதென்று விளங்காத ஆச்சரியமும் கலவரமும் உண்டாகி வதைக்கிறது.

'நாகராஜனும் என் பெற்றோர்களும் வருகிறார்களே! இதென்ன வேடிக்கை!' என்று இவன் ப்ரமித்துப் பார்க்கும்போது நாகராஜன் இவனுக்குப் பின்னல் வந்து முதுகைத் தட்டி 'டேய்! அவசரக்குடுக்கை! இனிமேல் அழாதே! மூர்ச்சை போகாதே. க்ருபாவதியைப்பார்க்க பிள்ளைவீட்டார்வந்துவிட்டார்கள். மாப்பிள்ளைதான் பாக்கியாம்; அதற்காக உன்னை அழைத்துப் போகவந்தேன். கிளம்பு...உம்... அப்புறம் விழிக்கலாம். இந்த குழாயில், அழுத கண்களையும் வழியும் மூக்கையும் அலம்பு; இந்த சரிகை உருமாலை அப்படி ஷோக்கா போட்டுக்கொள்ளு...

அடேயப்பா! நாவல்களில், கண்டதுங் காதல்...மூக்கல்...என்று படிப்பது போலல்லவா உனது நிலைமை இருக்கிறது. கட்டை ப்ரம்மச்சாரியாயிருந்தால் இத்தனை துடிப்புதான். என்னைப்போல் காலாகாலத்தில் மணந்திருந்தால் அவளே ரதி, நீயே மன்மதனுகிவிடும். உம் இதுவாவது கைகூடட்டும். வாடா!''...என்ருன்.

முரளிக்கு இன்னதென்று விவரிக்கமுடியாது வியப்பு உண்டாகியது. "என்னடா நாகராஜா ! உண்மையைச் சொல்லமாட்டாயா ! என்னைக் கேலி செய்கிருயா ! இதென்ன நாடகம்''...என்ருன்.

**நாக:—** ஆமாம் ! நாடகந்தான். அத்தைப்பாட்டிக் கதைக்கு நேரமில்லை. அவர்கள் காத்திருக்கிருர்கள். சீக்கிரம் வா என்ருல் புட்டு பூர்வோத்திரம் எல்லாம் விசாரிக்கக் கிளம்பிவிட்டான். எல்லா நாடகமும் உனக்காகத்தான் நடித்தேன். உனது ஆசை எத்தனைதூரம் இருக்கிறது பார்க்கலாம் என்று ஒரு தமாஷ் செய்தேன். அன்று ரேடியோவில் விசாரித்த உடனே நான் சும்மாவந்தேன் என்று நினைத்தாய். நானு சும்மா வருகிறவன்.

ரேடியோவிலிருந்த க்ருபாவின் புகைப்படத்தைப் பார்த்தேன். உனக்கு சரியான ஜோடி என்பதை அறிந்தேன். சங்கீதத்தைப்பற்றி ரேடியோக்காரர்களே சரியான சர்டிபிகேட் கொடுத்ததால் அந்த சந்தேகமும் நிவர்த்தியாயிற்று. உடனே நான் ஸ்டேஷனுக்குப்போய் அவர்களுக்கு உங்கப்பா எழுதுவதுபோல் கடிதம் எழுதி தாமதக் கட்டணங் கட்டி போட்டுவிட்டு வந்தேன்.

இன்று உனது மோகத்தை நேரில் பார்த்ததும் உன் வீட்டிற்குப்போய் நடந்ததைக் கூறி உன்பெற்றோர்களைச் சமாதானம் செய்து அழைத்துவரும் சமயம் இந்தப் பெரியவர் உன் பிதாவிடம் ஏதோ காரியமாக வந்தார். அவருடைய காரிலேயே அழைத்துவந்தேன். போதுமா! நான் சொல்லியதுபோல் உங்கம்மாதான் எப்படியோ? உம், வா...என்ருன்.

முரளியின் ஆச்சரியம் கரைபுரண்டது, ராஜாவின் முன் யோசனையும் தன்பாலுள்ள ஆழ்ந்த அன்பும் அவனை ப்ரமிக்கச் செய்தன. நாகராஜனை சேர்த்துக் கட்டிக்கொண்டான். முன்பிருந்த அழுகை மாறி சந்தோஷபிம்பமாக மாறினன். "ஏண்டா, அம்மா தாம்பூலத்துடன் ஏதாவது கொண்டுவந்திருக்கிருளா! முன்பு ரவிக்கை போயிற்றே என்று அழுதாளே, அதை எண்ணி சும்மா வந்துவிட்டாளா !'' என்ருன்.

"டேய்! இத்தனை தூரம் செய்தவனுக்கு அது தெரியாதா! பஸ்டுக்ளால் தகிடி சேலையுடன் இரவு நிச்சயதார்த்தம் நடக்கப்போகிறது. ரேடியோ கச்சேரி முடிந்ததும் நிச்சய தாம்பூலம். சரிதானு! கிளம்புடா! நேரமாகிறது'' என்ருன்.

மாப்பிள்ளை ஷோக்காக அலங்காரம் செய்துகொண்டு சென்றான். இருவரும் மாடி ஹாலுக்குப் போனதும், 'வாருங்கள்! வாருங்கள். மாப்பிள்ளை சார்!' என்று வீட்டுக்காரர் முதலில் கூப்பிட்டார். அழகுடன் ஆனந்தமயமாக உள்ள முரளியைப் பார்த்ததும் யாருக்குத்தான் சந்தோஷம் பொங்காது.

க்ருபாவதி தம்பூராவை தூரவைத்துவிட்டு சற்று தூரத்திலேயே நின்றிருந்தாள். முன்பு பார்த்த பெண்ணைவிட பதின்மடங்கு அதிகரித்த அழகுடன்விளங்கும் க்ருபாவதி, பார்வதியம்மாளின் இதயத்தையே கொள்ளைகொண்டுவிட்டாள் என்றால் மற்றதைக் கேட்கவேண்டுமா !

க்ருபாவதி முரளியை இமை கொட்டாது பார்த்துப் பூரித்தாள். தான் சாதாரண குடும்பத்துப் பெண்ணாயிற்றே! அத்தனை பெரிய பணக்காரர்கள் தன்னை மணப்பார்களா! என்ற ஏக்கம் வந்தது. முரளியின் அழகில் க்ருபா ஐக்யமாகிவிட்டாள். சம்பிரதாயப்படி க்ருபா முதலிலேயே எல்லோரையும் நமஸ்கரித்தாயிற்று. பிறகு வந்த முரளியை, தானாகவே சென்று 'என்னை ஏற்றுக்கொள்ளு; கைவிடாதே' என்று கேட்கும் பார்வையோடு நமஸ்கரித்தாள்.

அவளுடைய நீண்ட ஜடை குனிந்து சேவிக்கும்போது முரளியின்காலின்மீது தடாரென்று விழுந்ததுகண்டு எல்லோரும் கொல்லென்று நகைத்தார்கள். அந்த ஜடையின் ஸ்பரிசமே முரளிக்கு ப்ரம்மானந்தமாக தேகம்முற்றும் அமிருதம் பாய்ந்ததுபோல் தோன்றியது. ஜடையை தானே எடுத்து முதுகின்மீது போட்டான். அதற்கு மறுபடியும் கொல்லென்று எல்லோரும் சிரித்தார்கள்.

**நாக:**—சார்! பெண்ணை ஆசீர்வதித்து, நீதான் எனது பாரியை என்ற தத்துவத்தை ஜடையின் மூலம் மாப்பிள்ளை காட்டிவிட்டார். ஆதலால் இனி நிச்சயதார்த்தம் நடக்கலாம். சரி...பெண்ணை சற்று கானமழைபொழியச் சொல்லவேண்டும்...என்னடா முரளீ! 'ஓ மைடியர் டார்லிங்!...ப்ளீஸ்...யுவர் மியூஸிக்'...என்று சொல்லேண்டா! பிள்ளையார்போல் உட்கார்ந்திருக்கிறாயே'' என்றான். மறுபடியும் கொல்லென்ற சிரிப்பு நாதம் ஹாலில் சூழ்ந்துகொண்டது,

அந்த ஓசையை விரட்டியடித்து இனிமையான சங்கீத நாதம் கிளம்பியது. **கேதார** ராக ஆலாபனம் செய்து ''சமயமிதே நன்னுப்ரோவ'' என்கிற பொருத்தமான பாட்டைப் பாடினாள். எல்லோருக்கும் இரக்கம் உண்டாகி உள்ளத்தில் ஆனந்தம் ஊடுருவிப்பாய்ந்தது. கல்யாணம் செய்துகொள்ளும் இன்பத்தை முரளியின் இதயம் இப்போதே அனுபவித்துப் பூரித்தது. க்ருபாவதியின்மீது பாய்ந்த விழிகள் திரும்பவே இல்லை. க்ருபாவதியின் முகமும் அன்றலர்ந்த தாமரையைப்போல் மலர்ந்தது, பிறகு எல்லோரும் தாம்பூல சகிதம் வீட்டிற்குவந்தார்கள். முரளிக்கு எப்போது கல்யாணம் முடியும் என்கிற ஆவல் பூர்ணமாகியது.

## 10

**விச்:**—(நாகராஜனின் காதோடு) ராஜா ! அந்த பத்திரகாளியம்மாளின் சம்மதத்தைத் தெரிந்துகொண்டு செய். நீயும் நானும் சொல்லிவிட்டால் ஆயிற்று!

நாகராஜனும் வெகு கெட்டிக்காரனானையால் ''மாமீ! மருமகள் எப்படி! நீங்கள் கோரியதுபோலவே அமைந்திருக்கிறதா!'' என்று பார்வதியம்மாளைக் கேட்டான். முரளியும் அங்குவந்து சேர்ந்தான்.

**பார்:**—எல்லாம் நான் கோரி எதிர்பார்த்ததற்குமேலாகவே அமைந்திருக்கிறது. ஆனால் அவர்கள் மிகவும் சாதாரணப்பட்டவர்கள்போலிருக்கிறதே. பணம், சீரு இல்லாததோடு, அந்தப் பெண்ணின் தாயார் ஒரு வீட்டில் சமையல் செய்கிறாளாமே! அது மிகவும் கேவலமானதல்லவா?...என்று இழுத்ததைக் கேட்ட முரளிக்குக் கோபம் வந்துவிட்டது.

தாயாரை சுடச்சுட ஒரு பார்வை பார்த்துப் பல்லைக்கடித்தான். ''உனக்கிருக்கும் பணத்தை எந்த உடைப்பில் போடப்போகிறாய்! பணம்! பணம்! என்று பறக்கும் குணமும் வந்துவிட்டதா! இனி எந்தவிதமான யோசனையோ, சந்தே

கமோ வேண்டாம், இந்தப் பெண்ணை முடித்தே தீரவேண்டும். நீயும் சம்மதத்துடன் செய்தால் கண்ணியமாக முடியும், இல்லையேல் உன்னைத் தவிர நாங்கள் முடித்தே தீருவோம். பத்திரம்...என்று ஒரு ஜி. ஓ. போட்டான்.

இதற்குமேல் பார்வதியம்மாள் என்ன செய்வாள் பாவம். 'முரளீ...முரளீ! கோபித்துக்கொள்ளாதேப்பா! கேட்பவர்களுக்கு அந்தஸ்து சரிசமமாக இல்லையே என்று நினைத்தேன். உன் கவுரவத்திற்கும்...

**விச்:**—போடீ நச்சு பிடித்தவளே!, மனமொத்த சம்மந்தம் எதையும் நீ செய்யவிடமாட்டாய். இதுவேதான் எனக்கும் பிடித்திருக்கிறது. பொறுமையும் சாந்தமும் இந்த பெண்ணின் கண்களில் ஜ்வலிக்கின்றன. இத்தகைய பெண்தான் குடும்பத்திற்கு லக்ஷணமானது. முரளீ! இனி மீனம் மேஷம் பார்க்கவேண்டாம். உன்னிஷ்டப்படியே செய்...முரளீ! நீ என்ன குழந்தையா! உன் சம்மதத்தைத் தெரிவி.

**பார்:**—என்னை பரம சத்ரு என்று நினைத்துவிட்டீர்களா! எனக்குமட்டும் என்ன ஒரே அருமைக் குழந்தை ப்ரம்மசாரிக்கட்டையாகவிருக்கவேண்டுமென்ற எண்ணமா! ஏதோ உங்கள் ராவ்பகதூருக்குச் சரியான பணக்காரர்களில்லையே!...கேவலம் ஒரு சமையல்காரியின் பெண்ணுயிற்றே...

முரளி இடை மறுத்து "அம்மா! ஒரே தீர்மானந்தான். எனக்கு கை நிறைந்த பணத்தைவிட கண்நிறைந்த அழகுதான் ப்ரதானம்; ஆகையால் பணத்திற்காக இதை நிறுத்துவாயானல் எனக்கு இனி பிள்ளையார் கல்யாணந்தான். நினைவிருக்கட்டும்; நான் வெளியே போகிறேன்" என்று கூறியவாறு விற்றென்று போனன்.

என்னதான் அழகிற்கு அடிமையானாலும் சமையல்காரியின் மகளையா... என்று நினைக்கும்போது பார்வதிக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. தன் மகனுக்குக் கோபம் வந்தாலும் வரட்டுமென்றுகூடத் தோன்றியதால் கோபத்துடன் "நாகராஜன் இந்த சமையல்காரியின் பெண்ணைச் செய்தால் நம்மை நாலுபேர் சிரிப்பார்கள். நம்முடைய சமையல்காரி கோமதியின் தங்கை பெண்கூடத்தான் ரதி போலிருக்கிருள். அவளைச் செய்துவிட்டால்போகிறது. கொஞ்சத்திற்கு கொஞ்சம் அந்தஸ்து வேண்டாமா...பயித்தியக்காரன்கூட இந்தமாதிரி சம்மந்தம் செய்ய மாட்டான். நம்மைப்போல் பெரிய பணக்காரராயில்லையெனினும் சாதாரண ஒரு உத்யோகஸ்தன் அல்லது விவசாயியாகவாவது இருக்கவேண்டாமா! நான் இந்த கல்யாணத்திற்குச் சம்மதிக்கவேமாட்டேன். நாகராஜா! நீ முரளிக்கு ஆப்தமித்திரனுயிருந்து இம்மாதிரி ஒரு சமையல்காரியின் பெண்ணைத் தேடி வைத்த வயித்தெரிச்சல் எனக்குச் சற்றும் பிடிக்கவே இல்லை. நீ என்ன அறியாத பாப்பாவா! உனக்கு அந்தஸ்தும் கௌரவமும் தேடித் தருவதற்குச் சொல்லவேண்டுமா! ராவ்பகதூர் பட்டம் பெற்றவரின் பிள்ளைக்கு...மாதம் இரு நூறு ரூபாய் சம்பாதிக்கின்ற பையனுக்கு...ஒரு சமையல்காரியின் பெண் கிடைத்தாள் என்று நாலுபேர் பரிகளித்தால் அது உனக்கு மிகவும் சம்மதமாக இருக்குமா! நானயிருந்தால் உனக்கு அப்படிச் செய்வேனு! நீ இம்மாதிரி செய்தது நன்ருயிருக்கிறதா!" என்று முறைத்தாள்.

உண்மையில் கிருபாவதி ஒரு சமையல்காரியின் மகள் என்று நாகராஜனுக்குத் தெரியாது. தெரிந்து இம்மாதிரி செய்ததாகக் கூறும் அபாண்ட வார்த்தையைப் பொறுக்காத நாகராஜன், "மாமீ! என்னை மன்னிக்கவேண்டும். சத்யமாக நான் இந்த சம்பந்தத்தைத் தெரிந்து செய்யவில்லை. முரளியை நான் உடன் பிறந்த தம்பியாக நினைத்திருப்பதை ஆண்டவன்தான் அறிவான். அவனுக்குப் பிடித்தமான பெண்ணை மணந்து எங்காவது நன்ருயிருந்தால்போதும் என்கிற அதிக ஆசையால் நான் அலைந்தேன். நீங்கள் இம்மாதிரி அபாண்டப்பழி சொல்வது எனக்கு மிகவும் விசனமாக இருக்கிறது. நீங்கள் என்மீது குறைபட வேண்டாம். அவரவர் விருப்பப்படியே யாவும் நடக்கட்டும். நான் இப்போதே போய் அவர்களிடம் நீங்கள் சம்மதப்படவில்லை என்று சொல்லிவிட்டுப் போகி

றேன். என்மீது நீங்கள் புகார் கிளப்பவேண்டாம், உங்கள் பகதூருக்கு ஏற்ற சர் பட்டதாரியின் பெண்ணைத் தேடி மணம் செய்வியுங்கள். நமஸ்காரம், நான் போகிறேன்'' என்று கூறியவாறு தன் மனைவியை அழைத்துக்கொண்டு வெகு முடுக்காகப் போய்விட்டான்.

பார்வதியம்மாளுக்கு எப்படியாவது நாகராஜன் சொல்லி நிறுத்திவிட்டால் போதும் என்றே தோன்றியதால் மௌனம் சாதித்ததோடு கடவுள் கிருபை செய்து நிறுத்திவிடவேண்டுமே என்ற பிரார்த்தனை நெஞ்சில் போராடியது.

## 11

'அந்தம்மாளின் குணந்தான் உங்களுக்குத் தெரியுமே! பாம்பென்று தாண்டவும் முடியாது; பழுதென்று மிதிக்கவும் கூடாது. அத்தகைய சுபாவமுடைய வர்களிடம் எப்படித்தான் நடக்கமுடியும்? உங்கள் சினேகிதருக்காகப் பார்ப்பதா! அந்த பரதேவதைக்காகப் பார்ப்பதா! இப்போது என்ன செய்யப்போகிறீர்கள்? 'சமயல்காரியின் பெண். சமயல்காரியின் பெண்' என்று வாய்க்குவாய் சொல்கிறார்களே! இதில் நீங்கள் சம்மந்தப்படவே வேண்டாம். அவசரமாக வரும்படி ஊரிலிருந்து அப்பா கடிதமெழுதியிருக்கிறார் என்று கூறிவிட்டு நாம் ஊருக்குப் போய்விடலாம் வாருங்கள். இப்படி கவலையுடன் படுத்திருந்தால் என்ன செய்வது?' என்று நாகராஜன் மனைவி கண்ணம்மாள் தன் கணவனிடம்கூறினாள்.

**நாக:**—எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மூளையே குழம்பிவிடும்போலிருக்கிறது. நான் முரளியின்பால் எத்தகைய ஆழ்ந்த ப்ரீதியை வைத்திருக்கிறேன் என்பதை என்னால் அளவிட்டுக் கூறவே முடியவில்லை. அத்தகைய ஆப்தனுக்கு நான் பரமவைரியாவதா! அன்றி அந்த பத்திரகாளியம்மாளுக்கு விரோதியாவதா! என்பாடல்லவா தர்மசங்கடமாகிவிட்டது. இப்போது முரளி இங்குவந்து விடுவானே! நான் என்ன செய்வது ?

என்று கூறி முடிக்குமுன் இவன் சிறிதும் எதிர்பார்க்காதவிதமாய் க்ருபாவதியின் மாமா சதாசிவனும் அவர்கள் இறங்கியுள்ள வீட்டுக்காரரும் இங்குவந்து "மிஸ்டர் நாகராஜன் ! நாகராஜன் !'' என்று கூப்பிட்ட குரலைக்கேட்டதும் நாகராஜனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "கண்ணம்மா ! அந்த மனிதரின் குரல் போலிருக்கிறதே... அட க்ரகசாரமே...நான் இப்போது அவர்களுக்கு என்ன பதிலைச் சொல்லுவது?... நீ ஒன்று செய்கிறாயா!...நான் இன்னும் அவர்கள் வீட்டிலிருந்து வரவில்லை என்று சொல்லிவிடேன்...போ !'' போ !...என்று அவளைத் துரத்தினான்.

கண்ணம்மாள் வீதியில்வந்து வெகு வணக்கத்துடன் "ஓ ! நீங்களா ! அவர் இன்னும் வரவில்லையே! வந்தால் சொல்கிறேன்'' என்றாள்.

**சதா:**—இன்னுமா வரவில்லை? முக்ய விஷயமாகப் பேசவேண்டுமென்று வந்தேன்...சரி, சற்றுநேரம் சென்று வருகிறேன்—என்று கூறியவாறு போனார்.

உள்ளே வந்த கண்ணம்மாள் சிரித்தபடியே, "சரிதான். இந்ததரம் வாரண்டுக்காரனை ஒட்டியாகியது. சற்றுபொறுத்து வருகிறார்களாம். அப்போது என்ன செய்வது? இதோ பாருங்கள். நான் சொல்கிறபடியே கேட்டு இப்போதே கிளம்புங்கள். வேறுவழி இல்லை. என்ன யோசனை ?...என்றாள்.

**நாக:**—நீ என்னவோ விளையாட்டாகச் சிரிக்கிறாய் ! எனக்கு இப்போது எப்படித்தானிருக்கிறது தெரியுமா ! இம்மாதிரியாகும் என்று நான் நினைக்கவே இல்லை, நாம் ஊருக்குப்போவது ஒன்றும் கஷ்டமில்லையே. போய்விடலாம், முரளியின் கதி என்னவாவது?...என்று அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே கண்ணம்மாள் தனதும் தன் கணவனுடையதுமான துணிமணிகளைப் பெட்டியில் வைக்கவாரம்பித்தாள்.

அதேசமயம் முரளி வெகு உத்ஸாகத்துடன் அங்குவந்து "டேய் ! நாகராஜா !... இதென்ன மூட்டை கட்டுகிறாய்...என்ன சமாச்சாரம். எழுந்து வாயேன், புடவை ஷாப்பிற்குப் போகலாம்'' என்றான்.

நாகராஜனின் மனம் உண்மையில் தர்மசங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கின்றது. முரளியைப் பார்த்த உடனே அவனுக்கு எங்குமில்லாத துக்கங்கூடப் பொங்கிவிட்டது. முரளியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "முரளீ! நாம் ஆதியில் பழக ஆரம்பித்த நாள்முதல் நம்முடைய ஸ்னேகம் இடையில் முறியாதிருக்கவேண்டுமே என்று நான் இராப் பகலாக ஆண்டவனை ப்ரார்த்திப்பது அந்த எம்பெருமானுக்கே வெளிச்சம். அந்தக்கரண சுத்தியுடன் உன் விஷயத்தில் நடப்பதை உன் தாயார் வெகு கேவலமான முறையில் எண்ணி எனக்குச் சரியான சன்மானம் கொடுத்துவிட்டார். நான் இனி இந்த விவாகத்தில் ப்ரவேசிக்கமாட்டேன். நான் இங்கிருந்தாலே உன் தாயாருக்குக் கோபமுண்டாகும். ஆகையால் ஊருக்குக் கிளம்புகிறேன். என்மீது கோபித்துக்கொள்ளாதே. நமது சினேகம் முறியாதிருக்கவேண்டுமாய் நான் பகவானை ப்ரார்த்திக்கிறேன்" என்று மூச்சுவிடாது கூறினன்.

இதைக்கேட்ட முரளிக்கு கோபம் தலைக்குமேல் ஏறி கண்கள் சிவந்தன. "அப்படியா சமாச்சாரம்! நான் நினைத்தபடிதான் காரியம் முடிந்துவிட்டதா! அதான் அப்பாவுக்கு ஏதோ சந்தேகம் உதித்தது. உடனே என்னைப்போய் பார்க்கும்படி அனுப்பினர். ராஜா! ஒரேவார்த்தை! உனக்குப் பால் ப்ரதானமா! பானை ப்ரதானமா! பானை சுடுகிறதென்று கையைவிட்டுவிட்டால் பால் அத்தனையும் கொட்டிப் பாழாவதை நீ விரும்புகிருயா! அப்படி இருந்தால் இனி அதைப்பற்றிப் பேச்சே வேண்டாம்! நீ போகும் ஊருக்கு இன்ஞெரு டிக்கட்டு எனக்கும் வாங்கிவிடு" என்று சற்று துக்கமும் த்வனிக்கக் கூறினன்.

இதைக்கேட்ட நாகராஜனின் உள்ளம் உருகியது. முரளியின் வார்த்தைகள் அவன் மனத்தை ஊடுருவிச் சென்றன. "முரளீ! நான் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. மனிதனுக்கு மானமும் ரோஷமுந்தானேப்பா முதலில் நிற்கிறது! விவாகமென்பது இன்றுகூடி நாளை அழியும் காரியமா! ஆயிரங்காலத்துப் பயிரல்லவா? என்னல் உனக்கு ஒரு நன்மை உண்டாகியது என்றால் அது சந்தோஷமாகவிருக்கும், அதற்கு நேர்விரோதமாகவிருக்குமாயின் அது சரியா?

என்று முடிப்பதற்குள் முரளியின் தகப்பனர் அங்குவந்து சேர்ந்தார். "ராஜா! சரியோ, தப்போ! அவைகளைப்பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்கப் பொழுதில்லை. இதுகாறும் இத்தனை ஆப்த சினேகிதர்களாக இருந்ததன் அடையாளமாக முரளிக்கு நீ அவனிஷ்டப்படி செய்யப்போகிருயா! அவனை என்றென்றும் கட்டை ப்ரம்மச்சாரியாகச் செய்யப்போகிருயா! நீ அறிவில்லாதவனில்லை. அவள் ஏதோ உளறினல் அதைப்பற்றி நமக்கு அவச்யமில்லை. நீ வந்த பிறகு நான் அவளிடம் ஒரே கண்டிப்பாகச் சொல்லிவிட்டு வந்தேன். கல்யாணம் இனி நிற்கப்போவதில்லை. நடந்தே தீரவேண்டும். ஆகையால் எழுந்திரு. ஆடம்பரமின்றி ஒரு கோயிலில் செய்துவிடலாம்.

அவள் வந்தால் வரட்டும். இல்லையேல் காரியம் நடந்தே தீரும்... ராஜா! அவர்களிடம் போய் நீ நிச்சயம் கூறிவிட்டுவா! எழுந்திரு" என்று சமாதானம் செய்தார். முரளியும் கண்ணீர்விட்டு நிற்பதைக்கண்டு மனது உருகியது.

'மாமா! உங்களுக்காக நான் எனதுசொந்த கவுரவத்தையே விட்டுவிடுகிறேன்; அதைப்பற்றி கவலைப்படவில்லை. மாமியின் கோபத்திற்கு நீங்களும் முரளியும் ஏன் அந்த பெண்கூட பாத்திரமாகாதிருந்தால் போதும். இதுதான் நான்வேண்டுவது... சரி... இப்பொழுது என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்?" என்ருன்.

முர:—செய்யவேண்டுவது உனக்குத் தெரியாதா! கிளம்பு என்னுேடு. விவாக முகூர்த்தத்தை வைத்துவிடும்படி அவர்களிடம் சொல்லிவிட்டு கடைக்குப் போவோம் வா! இன்று மாலை கச்சேரி கேட்டபிறகு நிச்சயதார்த்தத்தை முடித்துவிடலாம். அம்மாவந்தாலும்சரி வராவிட்டாலும்சரி. தீர்மானமானமுடிவு இதுதான்.

முரளி என்னவோ தைரியமாகப் பேசிவிடுகிருனே யன்றி நாகராஜன் மனத்தில் சமாதானமோ, நிம்மதியோ உண்டாகவில்லை. பாக்குவெட்டியின் மத்தியில் அகப்பட்டதுபோன்ற ஒரு உணர்ச்சியே அவனை வாட்டியது. தனக்கு

எது எப்படியானாலும் தன் சிநேகிதன் நன்றாயிருந்தால் போதுமென்கிற ஒரே ஒரு நம்பிக்கைதான் சிறிது தைரியத்தை அளித்தது.

## 12

"கோமதி! நீதான் சொல்லேன்! சமையல்காரியின் மகள் நம் வீட்டில் மருமகளாக வருவதென்றால் அது அடுக்குமா! பார்ப்பவர்கள் சிரிக்கமாட்டார்களா! போன புண்ணியவான் இன்னும் வரக்காணவில்லை. இதென்ன வேடிக்கையோ! வயித்தெரிச்சலோ! எனக்குக் கட்டோடு பிடிக்கவே இல்லை'' என்று கடுகடுத்த முகத்தோடு பேசும்போது "உனக்குப் பிடித்தால் பிடிக்கட்டும். பிடிக்காவிட்டால் போகட்டும். இன்று ராத்திரி நிச்சயதார்த்தம் செய்வது நிச்சயம்... சாமான்களை அப்படி வை''...என்று கூறியபடியே விச்வநாதன் உள்ளேவந்தார்.

பின்னேடு வந்த வேலைக்காரன் பெரியதாக இரண்டு கூடைநிறைய சாமான்களைக் கொண்டுவைத்தான். பார்வதியம்மாளுக்கு இவைகளைக் கண்டதும் எரிகிற அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோலாகிவிட்டது. "ஐயையோ! இதென்ன கண்ராவி! சமயல்காரியின் மகளுக்கா இத்தனை தடபுடல்!'' என்று வெடுக்கெனக் கூறியவுடனே, அவர் சகிக்காமல் அவளை ஒரு விரைப்பு விரைத்துப் பார்த்து கையைப்பிடித்து இழுத்துத் தள்ளிவிட்டு "சனியன் பிடித்தவளே! நீ பெத்ததாயா! பிரமராக்ஷஸியா! ஒரே ஒரு மகனின் சந்தோஷத்தைச் சிதைக்கும் நீயா தாய்! நீ பேய்தான்'' என்று கூறும்போது நாகராஜன் அவசர அவசரமாக ஓடிவந்து "மாமீ! மாமீ! என்னை மன்னிக்கவேண்டும். பணமில்லையே என்பதற்காகத் தானே நீங்கள் வருத்தப்பட்டீர்கள். அந்தப் பெண்ணின் மாமாவுக்குக் குழந்தைகளே இல்லையாம். அவர் தனக்குள்ள சொத்துக்களைப் பூராவும் கிருபாவதிக்கு தான் கொடுக்கப்போகிறாராம். இதோ! இப்போதே உங்களிஷ்டப்படி சீர்வகைகள் வாங்கிக்கொள்வதற்காக 5 ஆயிரம் ரூபாய் அவர் எண்ணிவிட்டார். இதோ! தட்டுடன் இருக்கிறது. அதோடு அந்த பெண்ணின் தாயார் தனது உறவுக்காரர்களின் வீட்டில் ஒத்தாசைக்காக இருக்கிறார்களாம். சமையல்காரியாக இல்லையாம். இவைகளை இப்போதுதான் விசாரித்துக்கொண்டு வந்தேன். இனிமேல் உங்களுக்கு யாதொரு ஆக்ஷேபனையும் இருக்காதென்று நம்புகிறேன். அதோ முரளி வருகிறான்...என்று கூறியவாறு தட்டுடன் ரூபாயை பார்வதியம்மாளிடம் கொடுத்தான்.

என்னே ஆச்சரியம்! **பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்** என்கிற பழமொழி பொய்யாகுமா! 5 ஆயிரம் ரூபாயா! சீருக்காக மட்டுமா!...5 ஆயிரமா...அவா அம்மா சமயல்காரியில்லையா...ஏண்டாப்பா! நாகராஜா! விஷயத்தை நீ சரியாய்க் கூறாததால் ஏதோ உளறிவிட்டேன். கோபிக்காதே. இதெல்லாம் எனக்காகவாடாப்பா! பார்க்கிறவர்களுக்காகப் பெருமைக்குத்தான்...நிச்சயதார்த்தத்திற்குப் புடவை வாங்கியாயிற்றா! என்ன புடவை...இதுவா! ஊஹூம்... இது நன்றாகவே இல்லை. நல்ல தகடி சேலைதான் எடுக்கவேண்டும். நாகராஜா! காலையில் நடந்ததைப்பற்றி கோபிக்காதேப்பா! ஏதோ உங்க தாயார் திட்டியதாக எண்ணிக்கொள்ளு...ரேடியோ பாடும் நேரமாகிவிட்டதா என்ன!... அடாடா! என்ன அத்புதம்!'...என்று கூறுவதைக் கேட்டு முரளியும் நாகராஜனும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள்.

பார்:—முரளீ! முரளீ! வெளியே போகாதேடா! காரைத் தயார் செய்... கடைக்குப்போய் நிச்சயதார்த்தத்திற்குப்புடவை வாங்கிவரலாம். நாகராஜா! நீயே முன்னே நின்று காரியத்தை முடித்துவிடப்பா...நீயும் உன் மனைவியும் கல்யாணமாகும் வரையில் இங்கேயே இருக்கவேண்டும். போகவேகூடாது கண்ணம்மா! நீயும் கடைக்கு வா!—என்று வெகு விரைவில் படிந்துவிட்டாள்.

இனிமேல் கேட்கவேண்டுமா! அன்று க்ருபாவின் சங்கீதம் சங்கீத ப்ரியர்களை அப்படியே ப்ரமிக்கச் செய்தது. அந்தகையை அபூர்வமாயும், ஆனந்தமாயும் கர்ணாம்ருதமாயும் அமைந்ததைக் கண்டு அவளது இதயமே பூரித்தது.

மேலும் ஒருமாதமாயிற்று. ஸ்ரீமதி கிருபாவதிக்கும் முரளீதரனுக்கும் வெகு விமரிசையாய் கல்யாணம் நடந்தேறியது. தம்பதிகளின் உள்ளம் தேனும் பாலும் போல் ஒன்றுகலந்து மகிழ்ந்தது. பார்வதியம்மாளுக்கு ஸ்ரீமகாலக்ஷ்மியைப் போல் மருமகள் அத்புதமான ஸௌந்தர்யத்துடன் வந்திருப்பதுபற்றி மிக்க சந்தோஷந்தான்; எனினும் சரிக்குச் சமமான அந்தஸ்துடன் கூடிய சம்மந்திகளாய் இல்லாததால் சம்மந்திகளை சற்று இளைப்பமாகவே எண்ணினாள்.

க்ருபாவின் அதிருஷ்டம், அவளுடைய ஜாதகத்தின் பலன் பெரிய அந்தஸ்தில் வந்து சேர்ந்தாள் என்று உலகம் மிகவும் கொண்டாடியது. முரளீதரனின் வாழ்க்கையில் புதிய இன்பமும், புதிய சோபையும் உண்டாகியது. அவனுடைய ஒண்டிப்படுக்கை நீங்கி ஜோடிப் பறவைகளாகியதைக் காணும்போது விச்வநாதனின் உள்ளம் ப்ரம்மானந்த நிலையை அடைந்தது. பார்வதியம்மாளுக்கும் சந்தோஷந்தான். ஆனால், "சம அந்தஸ்து இல்லையே!" என்று சிறிது விசனந்தான்.

தட்டில் பழவகைகளுடனும் டம்பளரில் பாலுடனும் க்ருபாவதி முரளியின் சயன அறையில் ப்ரவேசித்த காக்ஷியைக் கண்ட முரளியின் இதயம் அளவிட்டுக் கூறமுடியாதவிதம் இன்பக்கடலாடியது. 'அன்று பகவான் ஜகன் மோகனவதாரங்கொண்டு கிடைத்தற்கரிய அமுதம் கொடுத்ததாக என்றோ படித்த விஷயம் இப்போது உன்னைப் பார்த்ததும் நினைவிற்கு வருகிறது' என்று கூறிக்கொண்டே தட்டை வாங்கி மேஜைமீது வைத்தான்.

முதல்முதல் தனியிடத்தில் கிருபாவும் முரளியும் சந்திக்கும்போது ஒருவருக்கொருவர் அடைந்த ஆனந்தம் எல்லைகடந்து போட்டியுண்டாகி பெரும் புரட்சியையே விளைவித்தது. 'க்ருபா! உன்னுடைய சங்கீதமும் அழகுமல்லவா என்னை இப்படி உனக்கு அடிமையாகச் செய்தன' என்று கூறி அவளை மூச்சுத்திணற...

"இல்லை; இல்லை... அவைகளுக்காக நீங்கள் அடிமையாகவில்லை. என்பால் தங்களுக்கிருக்கும் பரம கிருபையினால் தங்களிடம் அடியாள் தொண்டு செய்யும் அபாரமான பாக்யம் கிடைத்தது. தாங்கள் சொல்வதுபோல் நான் தங்களுடைய அழகிற்குமட்டும் மதிப்பு கொடுக்கவில்லை. உங்களுடைய விலையிலாத ப்ரேமைக்குத்தான் நான் அடிமையானேன்' என்று ஆனந்தப்பெருக்குடன்கூறி இன்புற்றாள்.

முரளி:—க்ருபா! உனக்குத் தனிமையில் என் கையினாலேயே பூட்டி அழகு பார்க்கவேண்டுமென்ற பேராவலினால் இதோ இந்த வைரமாலையை வாங்கி வந்தேன். இது எப்படி மின்னுகிறதோ அதேபோல் நீ ஜாஜ்வல்யசுந்தரியாய் மின்னுகிறாய். இதோ! இதைப் போட்டுவிடுகிறேன்—என்றான்.

க்ருபா ஒருமாதிரி சிரித்தபடியே, 'வாஸ்தவம், இன்று இளமையின் முடுக்கில் நானும் வைரத்தைப்போல் ஜ்வலிக்கலாம். வைரத்தை ஜாக்ரதையாக வைத்திருந்தால் என்றும் இதேபோல் ஜ்வலிக்கும், மனிதர்களின் அழகு அப்படியில்லையே! இந்த யௌவனம் முதிர்ந்தால் அழகும்கூட முதிர்ந்து கிழமாகவன்றோ போய், விகாரமும் தோன்றும்படியாகும். வைரத்தின் பளபளப்பை நான் உங்களிடம் காணவில்லை. வைரத்தைப்போன்ற உங்கள் இதயமும் வைரமாக இருக்கவேண்டும். சரீரமும் வைரமாகவிருக்கவேண்டும். நமது வாழ்க்கையின் மகிழ்ச்சியும் என்றும் வைரமாகவிருக்கவேண்டும் என்றுதான் நான் ப்ரார்த்திக்கிறேன்" என்றாள்.

முரளி வியப்புடன், "க்ருபா! ஏதேது? பெரிய பண்டிதையைப்போல் பேசுகிறாயே! படிப்பென்னவோ அதிகமில்லை என்கிறாய். வைரத்திற்கு உபமானம் பலமாகக் கூறுகிறாயே! பேஷ்! கிருபா! உன் சாதுர்யம் என்னைப் பின்னும் ஆனந்தத்தில் மூழ்கவைக்கின்றது. இந்த வைரமாலைக்கு உன்னால் அழகு வருகிறதா! வைரமாலையால் நீ பிரகாசிக்கிறாயா? என்று சந்தேகமாகவிருக்கிறது. க்ருபா!


நாம் அடையும் இந்த ஆனந்தத்திற்குக் காரணம் என்னுடைய ஆப்த மித்திரன் நாகராஜனேயாவன்.

**க்ருபா:**—(இடைமறுத்து) இல்லே! இல்லே. இதற்குக் காரணம் ரேடியோதான்.

**முரளி:**— இல்லே: உன்னுடைய சங்கீதந்தான்...

**க்ருபா:**— இல்லவே இல்லே, உங்களுடைய சங்கீத ஞானமும் ஆசையுந்தான்.

இவ்வாறு பேச்சு ஸ்வாரஸ்யத்தில் போட்டி அதிகரித்து இரவு போவதே தெரியாது போயிற்று. ஆனந்த உதயத்தில் அகம் மகிழும்போது சூரியோதயம் எப்படித் தெரியப்போகிறது?



"நீ சுத்த பயித்தியக்காரி என்பது எனக்கு இப்போதுதானு தெரியும். நீ என்னேடு கூடப்பிறந்த நாள்முதல் தெரியும். என் பெண்கள் உனக்குச் சம அந்தஸ்தாயும் அழகாயும் இல்லேயென்று நீ விலக்கிறையே யன்றி அவர்களுக் கென்னவோ நல்ல இடத்தைத்தான் பகவான் கொடுத்தார். புஷ்பவல்லிக்கும் கொடுத்துவிடுவார் என்பதில் சந்தேகமில்லே. நீ நன்ருக ஏமாந்தாய். அந்த ராஸ்கல் நாகராஜன் இருக்கிருனே ! அவன் உனக்கு நல்ல பட்டை நாமத்தைப் பறக்கச் சாத்தி கரியையும் முகத்தில் பூசி உன்னே மெஸ்மெரிஸம்செய்து மயக்கிவிட்டான்.

**பார்:**—என்ன அண்ணு ஏதேதோ பேசுகிருய்! எனக்குத் தகுந்த உத்யோகப் பதவியில் சம அந்தஸ்து இல்லேயே தவிர மற்ற அம்சத்தில் என்ன குறைவு? பெண்ணே...

**அண்ணன்:**—பெண்ணே ரதிதான்! பெண்ணின் தாயோ, எஞ்சினியர் கோபாலன் வீட்டுச் சமையல்காரிதான். பெண்ணின் மாமனே, ஒரு பஞ்சாயத் துப் பள்ளிக்கூடத்து வாத்தியார்தான். உன்னே ஏமாற்றுவதற்காக முரளியின் பணத்தையே எடுத்து உன்னிடம் கொடுத்து உன்னேச் சரிப்படுத்தி எதேதோ பொய் சொல்லித் தாலியைக் கட்டிவிட்டார்கள். இனிமேல் நீ என்ன செய்ய முடியும்? பணத்தைப் பார்த்தவுடனே வாயைப் பிளந்துவிட்டாய். அழகு பொம் மையை வைத்துக்கொண்டு ஆட்டம் ஆடு...என்று மிகவும் அலக்ஷியமாயும் தூக்கிக் கவிழ்த்ததுபோலவும் கூறியதைக் கேட்ட பார்வதியம்மாளுக்குப் பழய ஆவேசத்துடன் புதிய ஆவேசமும் தலே தூக்கி ஆடத்தொடங்கியது.

உடனே நேராக ஓட்ட ஓட்டமாகத் தன் கணவனிடம் ஓடினுள். அப்போது இராக்காலமாகையால் கிருபாவதி தனது பள்ளியறையில் அதியத்புதமாகப் பாடும் மதுரகீதத்தின் நாதம் காற்றில் தவழ்ந்துவந்து அவர் மனத்தைப் பரவச முறச் செய்வதால் அந்த கானத்தில் லயித்துப்போய் படுத்திருந்தார்.

அச்சமயம் அந்த அத்புத கானத்தைச் சிதறவடிக்கும் பைசாசத்தின் உக்ர கத்தைப்போல் பார்வதியம்மாள் விம்மலும் பொருமலும் அழுகையும் ஆவேசமு மாக அவரெதிரில்வந்து "எத்தனே நாளாக என்னே இம்மாதிரி அவமானப்படச் செய்யவேண்டுமென்று காத்திருந்தீர்கள்? அந்தப் படுபாவி நாகராஜன்! அவன் நாசமாய்ப்போக! அவன் செய்த சதிதானே இந்த நாடகமெல்லாம். அவனுக்கு நீங்களும் உளவு இருந்துதானே இப்படி நம் பணத்தைக்கொண்டே என்னே ஏமாற்றினீர்கள்... அவள் அசல் சமயல்காரி இல்லே என்றும் ஏமாற்றினீர்கள்... இந்த வயிற்றெரிச்சலே...

என்று பின்னும் ஏதேதோ சொல்ல வாயெடுப்பதற்குள் விச்வநாதனுக்கு ஆக்ரோஷம் பொங்கிவந்தது. பார்வதியின் அண்ணன்தான் இம்மாதிரி கலகத் தைச்செய்திருப்பான் என்பது அவருக்கு நன்ருகத் தெரிந்துவிட்டதால் அவளிடம் முகங்கொடுத்துப் பேசவும் பிடிக்காது பல்லேக் கடித்துக்கொண்டு, "நீ என்ன மனுஷியா ! ப்ரம்மராக்ஷஸியா ! ஆமாம். எல்லோரும் சேர்ந்துதான் நாடகம் நடித்தோம். இனி ஒளிவென்ன, மறைவு என்ன! ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணத்தை முடிக்கவேண்டும் என்பது பழமொழி. அதன்படி நான் தான் செய்தேன். அந்த ஸ்ரீமகாலக்ஷ்மி நம் வீட்டில் காலடி எடுத்துவைத்த வேளே அன்றே உன் மகனுக்கு சம்பளம் உயர்ந்தது. இன்ஸால்வென்ஸி கொடுக்கும் நிலேயிலிருந்த கடன்காரன் ஒருவன் திடீரென்று பணத்தையே திருப்பிக்கொடுத்தான். அந்த உத்தமியின் தரிசனம் ஒன்றே ஆயிரம்வராகன் பெறும். இனி இதைப்பற்றி நீ ஏதாவது அசட்டுப்பிசட்டென்று பேசுவதாயிருந் தால் உன்னேக் கட்டாயம் நான் துறக்கவே நேரிடும். நமது சந்தோஷம் முற்றும் நமது முரளியின் இன்பத்தில் மறைந்து கிடக்கிறது. வீணுக அவன் மனத்தை நோகவைக்காதே. நாகராஜனே அனுவசியமாய்த் திட்டாதே. அவனுடைய பேருதவிதான் தற்சமயம் முரளியின் வாழ்க்கை விளக்கை ஏற்றிவைத்திருக்

**மதுர கீதம்** கிறது. அதிகமாகப் பேசினால் வீண்ரஸாபாஸமாக முடியும்.. போ, வெளியே! அதோ! கிருபாவதியின் இன்பகானத்தைக் கேளு. உட்காரு இப்படியே! உனக்குள்ள சொத்துக்களை நீ பத்து பேருக்கு தானம் செய்யலாமே, அப்படிக்கிருக்க ஏன் இன்னும் ஆசைப்படுகிறாய்?... என்று பெரியதாக கர்ஜனை செய்தார்.

அதற்குமேல் பார்வதியம்மாளால் ஒன்றுமே சொல்லமுடியாது போய்விட்டது. இவர்களும் உடந்தையாக இருந்து தன்னை ஏமாற்றிவிட்ட வயிற்றெரிச்சலின் தாக்குதல் அவள் மூளையையே கலக்கிவிட்டதுபோலாகியது.

அதுமுதல் அவள் கண்களுக்கு நாகராஜன் பரம வைரியாயும் தனக்கு சத்ரு அவனே என்றும் தோன்றியது. கிருபாவதியின் அதிஸௌந்தர்ய சோபை இவளை யறியாது இவளைப் பரவசமுறுத்துகிறதென்றாலும் ஏதோ விஷம் ஒரு துளி பாய்ந்துவிட்டதுபோன்ற பேதநினைவுமட்டும் ஊடே ஆட்சிபுரிந்து வந்தது.

கிருபாவதி மிகவும் கெட்டிக்காரியாகையால் மாமியாருக்குத்தானே புடவை தோய்ப்பது, எண்ணெய் தேய்ப்பது, தலைவாருவது, தினம் கால் பிடிப்பது, வேளைக்கு வேளை தவறாது வெத்திலைமடித்துக் கொடுப்பது, பலகாரம் காப்பி தானே கொண்டு கொடுப்பது முதலிய சகல காரியங்களையும் செய்து மாமியாரின் அன்பைப் பெறுவதற்கு முயற்சித்தாள்.

பார்வதியம்மாளுக்கு நாளடைவில் மருமகளிடம் தன்னை யறியாத ப்ரீதி உண்டாகியதெனினும் அவளைத் தாய் வீட்டுப் பேச்சையே எடுக்கக்கூடாதென்றும், தாய் வீட்டுக்கே போகக்கூடாதென்றும், அவர்களும் ஒருவர்கூட இங்கு வரக்கூடாதென்றும் கண்டிப்பான திட்டம் போட்டுவிட்டாள். என்னதான் பணத்தில் திளைந்து கணவன் அன்பில் ஐக்யமாகி இருப்பினும் பெற்றதாயை அடியோடு பார்க்கக்கூடாதென்று சொல்வதை எந்த இளம்மனதுதான் முதலில் தாங்கும்? இந்ததண்டனையைஅறிந்த எந்தபெற்றதாயாரின் உள்ளந்தான்சகிக்கும்? தன் ஒரே பெண்ணைக்கொண்டு சந்தோஷமாக தன் காலத்தைக் கடத்த எண்ணிய ராஜம்மாளின் மனது உடைந்தது. ரேடியோவில் தன் பெண்ணைப் பாடக்கூடாதென்று எழுதிய கடிதத்தைத் தன் தமயன் கிருபாவதிக்குக் காட்டாது கிழித்தெறிந்துவிட்டு பாடச்செய்து இத்தகைய பெரிய சம்மந்தமென்கிற படுகுழியில் அவளைத் தள்ளியதாகவே அவளுடைய மனது சங்கடப்பட்டுத் தவித்தது.

'எனக்குச் சமானமான ஒரு சமயல்காரியின் பிள்ளைக்கு அல்லது ஒரு பள்ளிக்கூட வாத்தியாருக்கு ...அல்லது ஒரு விவசாயிக்கு, இல்லை சமயல்காரனுக்கே கொடுத்திருந்தால் எத்தனை ஆனந்தமாக என் கண்மணியுடனேயே நான் இருந்து என் காலத்தைத் தள்ளியிருப்பேன்? தகுதியில்லாத சம்மந்தம் என்னைப் பாழாக்கிவிட்டதே!' என்று ராஜம்மாள் வயிற்றெரிச்சலுடன் எழுதிய கடிதத்தை க்ருபாவதி வந்தது தெரியாமல் கிழித்து அடுப்பில் போட்டுவிட்டு தாயாருக்கு 'இனி கடிதம் எழுதவேண்டாம்' என்கிற தடையுத்தரவைமட்டும் போட்டுவிட்டாள். இந்த ரகஸியம் ஒருவருக்குமே தெரியாது.

ஏதோ ஒருவாறு புசல்காற்றடித்து ஓய்ந்ததுபோல் பார்வதியம்மாளின் மனமும் சிறிது ஓய்ந்தது; எனினும் காற்றில் உலுப்பப்பட்டு கட்டடங்கள் மரங்கள் இடிந்தும் முறிந்தும் விழுவதேபோல் சிற்சில நல்ல எண்ணங்கள் முறிந்து படுகுழிபோலாகிவிட்டன. அதில் முதல் ஸ்தானம் பெற்றது கிருபாவதியின் தாயாரை வெறுத்தது. இரண்டாம் ஸ்தானம் பெற்றது நாகராஜனைக் கண்டாலே பிடிக்காது அவனை வீட்டு வழி வராது செய்துவிடவேண்டுமென்ற தீவிரமான எண்ணமாகும்.

முரளியும் கிருபாவதியும் நாகராஜனும் கண்ணம்மாளும், வெகு சகஜமாயும் அன்யோன்ய பாவமாயும் உயிர்ச் சினேகிதர்களாயிருப்பதையும் பேசுவதையும் அடியோடு வெறுத்து, இதற்கென்ன வழி செய்வதென்று யோசித்தாள்.

தன் மகனுடைய மனத்தை பேதிக்கும்படியான மார்க்கத்தைச் செய்தால் தான் இந்த பந்தம் துலேயும் என்று உறுதி செய்துகொண்டு நாகராஜன் கெடுத லான எண்ணத்துடன் கிருபாவதியிடம் பழகுவதாயும் சிநேகம் செய்வதாயும் ஒரு சூடிசரத்தை சரியான பாணப்ரயோகமாகச் செய்துவிட்டாள்.

எத்தகைய ஆப்தமித்ரனை நாகராஜனை நினைத்திருந்தபோதிலும் இம்மாதிரி துராக்ருதமான வார்த்தைகள் அவன் காதில் பட்டவுடனே தான் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனுக்கு அனுகூலமே செய்யும் முறையில் ஆபிஸில் ப்ரமோஷன் கிடைக்கும்படியும் வெளியூருக்கு மாற்றலாகும்படியும் செய்துவிட்டான்.

அப்பழுக்கற்ற இதயத்துடனிருக்கும் நாகராஜனும் அவன் மனைவியும் தமக்கு முரளி பெரிய உதவி செய்ததாகவே எண்ணி அளப்பரிய ஆனந்தத்தை யடைந்து முரளியை வாழ்த்தினர்கள். ஆனல் மகா யூகசாலியான கிருபா வதிக்குமட்டும் இந்த மாற்றலின் ரகஸியம் தெரியாமலில்லை. ஒரு குற்றமும் இல் லாத மனிதன்மீது இத்தகைய அபாண்டத்தைச் சுமத்தியதும், தனக்கும் ஒரு இழுக்கை உண்டாக்கியதும் அவள் இதயத்தில் ஆணிபோல் குத்தி அம்புபோல் பாய்ந்தது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்யாஸ சம்மந்தத்தின் விபரீதத்தில் தாயைப் பிரிந்த துக்கம் ஒன்று, இந்த படாப்பழி கேட்டது ஒன்று. இன்னும் என்னென்ன விபரீத பயங்கரங்கள் நேரவிருக்கிறதோ! என்னென்ன ஆபத் துக்களுக்கு இலக்காக நேரிடுமோ! என்பதை நினைக்கும்போது அவளையறி யாது ஒரு பயங்கரத்தோற்றமுண்டாகி சித்திரவதை செய்து வாட்டியது.

## 14

மாதங்கள் சில ஓடிமறைந்தன. நாகராஜன் மட்டும் தவருது பழய அன் புடன் கடிதமெழுதி வருவதை நிறுத்தவில்லை. அப்படியே கண்ணம்மாளும் கிருபாவதிக்கு எழுதிவந்தாள்.

"முரளீ! தேவகன்னிகையைப் போன்ற உன் மனைவியின் மதுர கீதத்தைக் கேட்டு சில மாதங்களே ஆயிற்றெனினும் பல யுகங்களாகி விட்டதுபோன்று தோன்றுகிறது. முன்போலவே நாம் ஒரே ஊரில் இல்லையே என்று சதா நானும் என் மனைவியும் ஏங்குகிறேம். நீ தகப்பன ராகும் வழி ஏதாவது உண்டாகியதா! அச்சந்தோஷத்தை எனக்கு உடனே தெரிவி"

என்று நாகராஜன் வெகு சகஜமாயும் நிஷ்களங்கமாயும் எழுதிய கடிதம் ஏற்கெனவே பார்வதியம்மாளால் கலக்கப்பெற்ற முரளியின் மனத்தில் கொடிய பாணம்போல் தாக்கி, நூதன உணர்ச்சியையும் த்வேஷத்தையும் உண்டாக் கியது. ஆனல் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. கடிதத்தை கிருபாவதி யிடமும் கொடுக்கவில்லை. அக்கடிதத்திற்குப் பதிலும் எழுதவில்லை. கண்ணம் மாளுக்கு கிருபாவதி எழுதும் கடிதத்தில் தனக்கு ஓய்வில்லை, அதனல் பதில் அவர் எழுதவில்லை என்று எழுதிவிடும்படி திட்டம் செய்தான்.

அந்த திட்டத்திலிருந்தே ஏதோ விசேஷமிருப்பதாக கிருபாவதி யறிந்து கொண்டாள். இதே நிலையில் பின்னும் சில மாதங்களாயின; பார்வதியம்மாளின் ப்ரார்த்தனைக்கிரங்க கிருபாவதி கர்ப்பமானுள்.

"மன்னிக்கவேண்டும். அந்த யோசனைக்கு நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்; நாம் சந்தோஷமாய் இருப்பதற்காக உங்கள் தாயாரைப் பிரிந்துபோவது பெற்ற அன்னைக்கு த்ரோகம்செய்த மகா பாதகமாகவன்றே முடியும். நீங்கள் வேலையில் மாற்றலுக்கு ஏற்பாடே செய்யக்கூடாது. நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கிருபாவதி வெகு சாந்தத்துடன் கூறினள்.

இதுகேட்ட முரளி "க்ருபாவதீ! ஏதோ ஒன்றை அம்மா தொணதொண வென்று சொல்வதால் உனது முகம் சதா வாட்டமாகவே இருக்கிறது. இதனல் உன்னழகு எவ்வளவு குறைந்துவிடுகிறது தெரியுமா! **ஒரு பிள்ளைபெற்றலும் கிழவி; ஒரு சாலடித்தாலும் புழுதி** என்கிற பழமொழிப்படி எங்கே நீ கிழவி போலாகிவிடப் போகிருயோ! என்று இரவு பகலாக நான் பயப்படுகிறேன்.

நீ கர்ப்பவதியாகாதிருக்கவேண்டுமே என்று ப்ரார்த்தனை கூடச் செய்தேன். அம்மாவோ, எனக்கு நேர் எதிரிடையாக ப்ரார்த்தனை செய்தாள். கடவுள் அவளுடைய ப்ரார்த்தனைக்கு இரங்கி விட்டார். என் வேண்டுகோளுக்கிணங்கி நீ என்றும் இதே சௌந்தர்யத்துடனிருக்கும்படி வரமளிக்கவேண்டுமே...

என்று கூறியதைக் கேட்ட க்ருபாவதி முரளியின் தோள்களைப் பிடித்தபடியே "எத்தனைதரம் சொன்னாலும் நீங்கள் இந்த அழகு வார்த்தையை விடமாட்டேனென்கிறீர்களே! அழகுக்கு மனிதர்கள் ஆசைப்படுவதுண்டு. அதில் மோகிப்பதும் உண்டு. அழகுக்கே அடிமையாகிவிடுவது உண்டா! இதென்ன வேடிக்கை! அழகுக்குமட்டுமா நீங்கள் என்னை விரும்புகிறீர்கள்? நான் கிழவியாகிவிட்டால் அப்போது நீங்களுந்தானே கிழவராகிவிடுவீர்கள். இதற்காகவா இத்தனை கவலை?" என்றாள்.

முரளி:—க்ருபாவதீ! நீ என்னதான் சொன்னாலும் சரி. உன்னுடைய அபரிமிதமான அழகிற்கு முன்பு மற்ற எதுவும் த்ருணமாகத்தான் தோன்றுகிறது. என்னை என்னவோ கடவுள் இந்த உணர்ச்சியுடன் பிறப்பித்துவிட்டான். என்ன செய்வேன்? அது கிடக்கட்டும். அம்மா உன்னை உன் தாயார் வீட்டிற்கு அனுப்பவே மறுக்கிறாளே! நாமாகவாவது உன் தாயார் வீட்டிற்குப் போய் வரலாம் வருகிறாயா! இந்த சமயங்களில் உன் மனது சந்தோஷமாயிருந்தால் தானே, உனது சவுந்தர்யம் அப்படியே ப்ரகாசிக்கும். நான் இதையே திருப்பித் திருப்பிச் சொல்லச் சொல்ல உனக்குக் கோபம் வருகிறது. அந்தக் கோபச்சாயல் கூட உனக்கோர் பேரெழிலாகவே இருக்கிறது. க்ருபாவதி! உலகமே ஓர் சௌந்தர்ய பூங்காவனம்! அந்த வனத்தில் புஷ்பித்துள்ள அற்புத மலர்களே அழகிய உன்போன்றவர்களாவர்...

கிரு:—ஆமாம். மலர்கள் புஷ்பித்த உடனே வாடிப்போவதும் சகஜந்தானே... அதோ அம்மா கூப்பிடுகிறார்கள்; நான் போய்வருகிறேன்—என்று கூறிக்கொண்டே ஓடினாள்.

பார்வதியம்மாளின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஒரு திருப்பு திருப்பியபடியே, "அதோ! அந்த சமயல்காரி வந்திருக்கிறாள். இங்கு யாராவது பெரிய மனிதர்கள் வந்து இந்த ஸ்வரூபத்தைப் பார்ப்பதற்கு முன்பு அவளைப் போகச் சொல்லிவிட்டு வா... இல்லாவிட்டால் மாட்டுக்கொட்டிலுக்குப் போகச் சொல்லு," என்று வெடுக்கென்று கூறினாள்.

இதைக் கேட்ட க்ருபாவதியின் மனத்தில் தீப்பிடித்ததுபோலாகியது. "ஐயோ! இந்த பயித்தியக்காரி ஏன் இங்குவரவேண்டும்? நான் பிறக்கவே இல்லை என்று நினைக்கக்கூடாதா! என்ன ஆசை வேண்டியிருக்கிறது?" என்று நினைக்கும்போது அவள் கண்ணில் மளமளவென்று ஜலம் பெருகியது.

பெத்த தாயாரின் எலும்பும் தோலுமான சரீரத்தைப் பார்த்தவுடனே அன்னையின் பாசம் அவளையறியாது வந்து சூழ்ந்துகொண்டது. சில தினங்களுக்கு முன் "**தயாநிதி**" என்கிற நாவலைப்படித்துக் கண்ணீர்விட்ட கதி தற்சமயம் தனக்கே வந்துவிட்டதை எண்ண அவள் இதயம் சுக்கலாக வெடித்துவிடும் போலாயிற்று. ஏற்கெனவே அபாரமான அழகுடைய கிருபாவதி கர்ப்பவதியாயும் இருப்பதால் பெத்த தாயாரின் கண்திருஷ்டிகூடப் பட்டுவிடுமோ என்று ராஜம்மாளின் மனதே நினைத்தது, தன் மகளைக் கண்டவுடனே அணைகடந்த வெள்ளம் போல் பொங்கிவரும் அன்புடன் அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு வாய்பேச மாட்டாது நின்றாள்.

தன்னை இங்கு யாரும் லக்ஷயம் செய்யமாட்டார்கள்; இளப்பமாகக் கூடப் பேசுவார்கள் என்பது அந்தம்மாளின் மனது அறியும். இருந்தும் பெற்றபாசம் விடுகிறதா! "கிருபாவதி! சௌக்யமாம்மா! ஒரு தட்டுகொண்டு வா!" என்றாள்.

இதைக் கேட்டுக்கொண்டு வந்த பார்வதியம்மாள் "கிருபாவதீ! தட்டும் வேண்டாம்; முட்டும் வேண்டாம்; இந்த கன்னுபின்ன பக்ஷணங்களைத் தின்னாதே.

கண்ட எண்ணெயிலும் புழுத்தமாவிலும் செய்ததைத் தின்றால் உடம்புக்கு ஆகாது...அடி கோமதி! இந்த குப்பைதொட்டி பதார்த்தங்களை எடுத்து மாட்டுத் தொட்டியில் கொட்டு" என்று உத்திரவிட்டாள்.

உடனே கோமதி அவைகளை எடுத்துக்கொண்டுபோனாள். இச் செய்கை ராஜம்மாளின் உள்ளத்தில் அம்பு பொத்துவதுபோலிருந்தது. கிருபாவதிக்கும் மனது தவித்தது. உயர்ந்த புத்துருக்கு நெய்யில் பலகாரங்கள் தினம் சாப்பிட்டபோதிலும் தன் தாயார் கையினால் ஒரு கவளம் பழைய அமுது தின்றாலும் அது தேவாம்ருதத்திற்கு ஒப்பாகத்தான் இனிக்குமல்லவா!

தாயாரின் எதிரில் பதுமைபோல் நிற்கிறாளேயன்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ராஜம்மாளுக்கும் பேசவே தெரியவில்லை. கண்ணால் ஜலம் விடுவதைக்கண்ட பார்வதியம்மாளுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. "ஏண்டியம்மா கிருபாவதீ! இந்த வேளைக்கு எல்லோரும் சௌக்யமாயிருக்கையில் இந்த அழுகை எதற்கு? வயிறும் பிள்ளையுமாய் உள்ள உன்னெதிரில் இப்படி அவலக்ஷணம்போல் புலம்புவது அழகாயிருக்கிறது. சமையல்காரியின் வயிற்றில் பிறந்தாலும் நீ நல்ல சிற்றரசிபோலத்தான் இருக்கிறாய். என்ன அழுகை வேண்டியிருக்கிறது?" என்று சிள்ளென்று சீறி விழுந்தாள்.

ராஜம்மாளின் சப்த நாடியும் ஒடுங்கிப்போய்விட்டது. தானே வெகு தாழ்மையுடன் சம்மந்தியம்மாளின் எதிரில் வந்து, "சம்மந்தியம்மா! பகவத் கிருபையில் காரியம் நடந்துவிட்டபிறகு இப்படி சுடச்சுடப் பேசினால் நன்றாயிருக்கிறதா! கிருபாவதிக்கு நீங்களே தாயார்! நீங்கள்தான் சகலமும். எப்படியாவது பெரிய மனது செய்து அவளை அனுப்பினால், பொன் வைக்குமிடத்தில் பூவாவது வைத்து என் சக்தியானுசாரம் செய்து வளைகாப்பு பண்ணிக் கொண்டுவிடுகிறேன். அதற்காகத்தான் நான் வந்தேன். தயவுசெய்து அனுப்பவேண்டும்' என்று எத்தனையோ பயத்துடன் கூசியவாறு கேட்டாள்.

அலக்ஷியமும் ஏளனமும் த்வனிக்கும் குரலில் பகபகவென்று பெரிதாகச் சிரித்தவாறு பார்வதியம்மாள் ஒரு விரைப்பான பார்வை பார்த்தாள். அதே சமயம் திவான்பகதூர் கேசவனின் சம்சாரம் காரில் வந்து இறங்கியதைக் கண்டதும் அந்தம்மாளின் பாடு ஒருவிதமான திக்குமுக்கலாடிவிட்டது. வந்தவள் எங்கே தன் சம்மந்தியைப் பார்த்துவிடப்போகிறாளோ என்கிற பயத்தால், எழுந்து போகச்சொல்வதற்குள் வந்தவள் உள்ளே வந்துவிட்டாள்.

"வாருங்கள்! வாருங்கள்! உட்காருங்கள். சௌக்யமா" என்று விசாரித்தாள்.

**வந்தவள்:**—உங்களுக்கு பேரன் பிறக்கப்போகிறதென்று கேள்விப்பட்டேன். மெத்த சந்தோஷம். நாட்டுப் பெண் எங்கே? பிறந்தகம் போய்விட்டாளா! இருக்கிறாளா! அவளுக்கு நிலாச்சாப்பாடு நாளை இரவு வைக்கலாமென்று அழைக்கவந்தேன். அவள் தாயார் வரவில்லையா—என்றாள்.

இதைக்கேட்ட பார்வதியம்மாளின் வயிற்றில் புளியைக் கரைக்கின்றது. எங்கே 'நான்தான் சம்மந்தி, அழைத்துப்போக வந்திருக்கிறேன்' என்று சொல்லிவிடுவாளோ! என்கிற பயம் போராடுகிறதால் உடனே கோமதியைக் கூப்பிட்டு, "இந்தம்மாளுக்குக் காப்பி டிப்பன் கொண்டு வா! உங்க அக்காவை உள்ளே அழைத்துக்கொண்டு போ! கிருபாவதியை வரச்சொல்லு" என்றாள்.

அந்தோ! பரிதாபம்! இந்த வார்த்தையைக் கேட்ட ராஜம்மாளின் உள்ளம் எப்படித்தான் கொதிக்கும்? இதை தூரவிருந்து கேட்கும் கிருபாவதியின் நெஞ்சம் எப்படித்தான் பதைக்காது? இத்தனை நாளையவிட இன்றுதான் கிருபாவதியின் இதயம் இந்த வித்யாச சம்மந்தத்தின் விபரீதத்தை எண்ணித் துடித்தது. "இவள்தான் என் தாயார்" என்று சொல்லிவிடலாமா! என்ற அதிதமான எண்ணங்கூட ஒரு நிமிடம் பொங்கி வந்தது. தன் கணவனின் அன்பை எண்ணி அடக்கிக்கொண்டாள்.

உன் அக்காவை அழைத்துப்போ என்று சொன்னதும், கோமதி "அக்கா! எழுந்து வா! உள்ளே போகலாம்!" என்று கூப்பிட்டாள். ராஜம்மாளின் தேகமே நடுங்கியது. கண்கள் மழைபொழிவதை நிறுத்தமுடியவில்லை. தன்னை இத்தனை இளப்பம் செய்துவிட்ட பரிபவத்தைத் தாங்கமுடியாது நெருப்பில்பட்ட புழுகெனத் துடித்தாள்.

இதற்குள் கிருபாவதி அங்கு வந்து, வந்த செல்வச்சீமாட்டியை நமஸ்காரம் செய்தாள். வந்தவள் தட்டுடன் பலகாரங்களைக் கொடுத்தாள். அதைக் கண்ட பார்வதியம்மாள் சந்தோஷத்துடன், "கோமதீ! பலகாரங்களை உள்ளே பத்திரமாக வைத்திருந்து கிருபாவதிக்குக் கொடு. உயர்ந்த வகைகளாக இருக்கின்றன' என்று ராஜம்மாளின் எதிரிலேயே சொல்வதை அவளால் சகிக்கவேமுடியாது போனதால், இனிதான் இங்கிருப்பதில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்தவளாய்க் கிளம்பிவிட்டாள்.

இந்த பெரிய இடத்து சம்மந்தம் ராஜம்மாளுக்கு வேம்பாயும் எட்டிக்காயாயும் தோன்றியதேயன்றி வேறு தோன்றவில்லை. ஏதோ ஒருவிதமான தைரியத்துடன், "சம்மந்தியம்மா! நான் வருகிறேன். மனிதர்களிடமே மனிதத்தன்மை இல்லை என்றால் மிருகங்களிடமா இருக்கப்போகிறது. ஏழை பணக்காரர் என்பது என்றும் சாச்வதமில்லை. இன்று சிறு குடிசையாக இருப்பது நாளை பெரிய மாடி வீடாகலாம். உங்கள் செருக்கும் கௌரவமும் இப்படியே நிலைக்கும் என்பதுமட்டும் சிலாசாசனமில்லை. என் கிருபாவதி எப்படியாவது சுகமாயிருந்தால் போதும்" என்று கூறியவாறு போய்விட்டாள்.

பார்வதியம்மாளின் கோபமும் அவமானமும் உச்சத்தை எட்டின, தனது தலையிலுள்ள க்ரீடமே விழுந்துவிட்டதாக எண்ணி முகம் சவம்போலாகியது. குப்புறவிழுந்தும் மீசையில் மண்படவில்லை என்பதுபோல் தானே சற்று சமாளித்துக்கொண்டு, "கோமதீ! இன்னமும் தாமதம் செய்தால் உங்க அக்கா தெருவில் கல்லாலடிக்கத்தான் கிளம்புவாள், பயித்தியம் முத்திவிட்டது. ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாது தாறுமாறுமாக உளறிவிட்டுப் போகிறதே. இதை சீக்கிரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பச்சொல்லு... வந்தவளை நோக்கி, "வேடிக்கையைப் பார்த்தீர்களா! கோமதியைத் தேடிக்கொண்டு அக்கா, தங்கை என்கிற முறையை வைத்துக்கொண்டு அடிக்கடி வந்துவிடுகிறது. வயிற்றுக்கு வக்கில்லை. புத்தியும் ஸ்வாதீனமில்லை. இந்தமாதிரி கட்டைகளுக்கு சாவு வரக்கூடாதோ பாவம்... க்ரகசாரம், கர்மம் பூமிபாரம்" என்று கூறுவதைக் கேட்ட க்ருபாவதியை அப்படியே அக்கினியில் தூக்கிப்போட்டதுபோலாகிவிட்டது. அங்கு நிற்கவும் முடியாது தள்ளாடுகிறது. தன் தாயார் சென்ற வீதிப்பக்கம் ஒருவிதமான ஆவேசத்துடன் எழுந்து ஓடினாள். இதைப் பார்த்த பார்வதியம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மெல்லவும் மாட்டாது, சொல்லவும் மாட்டாது தவித்தவாறு குழம்புகிறாள். தன் கௌரவம் எங்கே குலைந்துவிடுமோ? என்கிற எண்ணமும் தலைதூக்கியது.

183028

வை. மு. கோ. வைரவிழா நாவல்

# க்ருபாமந்திர்

9 அழகிய படங்களுடன் கூடியது

விலை ரூ. 1—0—0

ஸ்ரீமதி. ஸமுத்ரா

## சந்தோஷ வாழ்க்கைக்குத் தேவை யாது ?

(தொடர்ச்சி)

**தங்கம்:**—பணமிருந்தால்மாத்திரம் வாழ்க்கை பூரண சந்தோஷத்தை அடைந்துவிடாது. நல்ல நெஞ்சு, பண்பட்ட நெஞ்சுதான் எல்லா சந்தோஷத்திற்கும் உறைவிடம். அதில் திருப்தி, கருணை, அன்பு, தயை முதலிய நற்குணங்கள் நிறைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நெஞ்சில்தான் கடவுள் இருக்கிறார்.

**சுமதி:**—அதென்னமோம்மா! "பணம் பத்தும் செய்யும்; பணமில்லாத ஆள் பாதி ஆள்" என்று சொல்லுகிறார்கள். பெரிய பங்களாவில் வேலைக்காரர்கள் புடைசூழ வசிக்கவும் விதவிதமான ஆகாரங்கள் சாப்பிடவும் பணமில்லாவிட்டால் முடியுமா? நல்ல நெஞ்சுமட்டுமிருந்தால் எல்லாம் முடியுமா? அதுதான் போகட்டும். என்னமோ திருப்தி என்கிறாயே. அல்ப சந்தோஷியாய் திருப்தியாயிருந்துவிட்டால் வாழ்க்கையில் முன்னேற்றமடைவது எப்படி! திருப்தியினால் எவ்வளவோ கெடுதல்கள் நேரிடுவதை பார்க்கிறோம். போதும் போதும் என்று இருந்துவிட்டால் உலகமே அழிந்து குட்டிச் சுவராகிவிடும். அரிய, பெரிய செயல்களைத் துணிந்து செய்வதற்கு வேண்டிய ஒரு ஆவல் மனத்திலே பிறக்காது. மக்கள் மிருகங்கள்போல் உண்பதும், உறங்குவதுமாய் வெறும் சாரமற்ற வாழ்க்கையிலேதான் ஆழ்ந்துவிடுவார்கள். இதற்கெல்லாம் பதில் சொல் பார்க்கலாம். "போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து" வாய்வேதாந்தத்திற்குத்தான் ஸரி.

**தங்கம்:**—எத்தனையோ பேருக்கு லக்ஷக்கணக்கான பணம் குவிந்து கிடக்கிறது; ஆனால் அவர்களுடைய வாழ்க்கை இன்பமாக, சந்தோஷ வாழ்க்கையாக இருக்கிறதா? என்று ஊன்றிப் பார்த்தால் நீ சொல்லுவது ஆதாரமற்ற வார்த்தைகள் என்று உனக்கே தெளிவாய் விளங்கிவிடும். பணம் என்று சொன்னதைவிட மனம், என்று சொல்வதுதான் சிலாக்கியம். நல்ல மனம் அதாவது பண்பட்ட நெஞ்சம்....உண்மையான முன்னேற்றம் எது சுமதி! பெண்களுக்காகட்டும், ஆண்களுக்காகட்டும் நிஜமான முன்னேற்றம் என்பது மற்றவர்களிடமுள்ள நன்மைகளை அறிந்துகொள்ள முயல்வதுதான். அதிலிருந்துதான் நம்முடைய மனம் பண்படுகிறது. ஒரு சமயம் திருதராஷ்டிர மஹாராஜா, தர்மபுத்திரரையும், துரியோதனனையும் கூப்பிட்டு உலகமெல்லாம் சுற்றி, யார் நல்லவர்களாய் நல்ல காரியங்களைச் செய்கிறார்களென்றும், யார் யார் தீயவர்களாய் இருக்கிறார்களென்றும் பார்த்துவரச் சொன்னாராம். முதலில் தருமபுத்திரருக்கு யாரைப் பார்த்தாலும் நல்லவர்களாகவே இருப்பதாய்த்தான் தெரிந்ததாம். யாராவது சிறு குற்றம் செய்தால்கூட வயதுக் குறைவினால் அல்லது தெரியாதத்தனத்தால் செய்வதாய் தோன்றியதே தவிர அவர்கள் வேண்டுமென்று குற்றம் செய்வதாய் தோன்றவில்லையாம். துரியோதனனுக்கோ யாரைப்பார்த்தாலும், குற்றம் செய்பவர்களாயும் எல்லோரும் தீயவர்களாயிருப்பதாயும் தோன்றியதாம். இதுபோல் நல்ல இதயம் உள்ளவருக்கு எல்லாம் திருப்தியாயிருக்கும். ஒவ்வொருவரிடமும் இருக்கும் நல்லதுதான் புலன்படும். நடந்துபோகிறவன் ஸைக்கிளில் போகிறவனைப் பார்த்துப் பொறாமைப்படுகிறான். ஸைக்கிளில் போகிறவன் மோட்டார் ஸைக்கிளில் போகிறவனைப் பார்த்து அதிருப்திப்படுகிறான். அவனோ காரில் போகிறவனைப் பார்த்து பெருமூச்சு விடுகிறான். மோட்டாரில் போகிறவனுடைய மனைவியோ தன் சிநேகிதிகளிடம் "திவான்பகதூர் ரங்கநாதய்யர் வீட்டில் இரண்டு காரிருப்பதால் அவரது மனைவிக்கு எப்பொழுதும் ஒரு கார் காத்துக்கொண்டிருப்பதாயும் தனக்கு அப்படி இல்லையென்று முறையிடுகிறாள். திருப்தி இல்லாவிட்டால் எந்த நிலைமையிலிருந்தாலும் அதிருப்தியே ஏற்படுகிறது. கொஞ்சம் படித்தவுடன் திருப்தியும், கொஞ்சம் பாட வந்தவுடன் கர்வமும், வரக்கூடாதே தவிர மற்றவைகளில் திருப்தி அவசியம்.



புகழ்பெற்ற ஸினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப் பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமை வாய்ந்த தென்னிந்திய நடிகை ஸ்ரீமதி வஸுந்தரா தேவி சொல்லுகிறார்.

"தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸுஸ் காபி, தூளையே உபயோகிக்கிறேன்."

Vasundhara Devi.

# நரஸூஸ் காபி

M N K.—16 TM.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMALKOIL, B. O.